பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 14 சனிக்கிழமை (26.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :92

# துணைப்படை ஏதும் இல்லை!

## புலிகளின் குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா பதில்



கொழும்பு,பெப்ரவரி 26

**இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் துணைப்படை என்று எதுவும் இல்லை என்று கூறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்துப் பேசிய நோர்வேயின் விசேட சமாதான ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிடமே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறினார்.**

தமது மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியல் துறை முன்னாள் பொறுப்பாளர் உட்பட 4 போராளிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கொல்லப்பட்டதற்கு இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களே காரணம் என்று புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்த நிலையிலேயே ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகளை சமமாகப் பங்கிடுவது மற்றும் உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயத்தில் புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதற்கான ஏற்பாடு ஒன்றை (பொதுக் கட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிப் போராளி சுகவீனத்தால் சாவு!

யாழ்ப்பாணம்,பெப்.26

கடற்புலிகளின் வடமராட்சிப் பிரதேச நிதிப் பொறுப்பாளர் மேஜர் தயானந்தன் (சின்னராசா தங்கவடிவேல்) நேற்றுமாலை சுகவீனம் காரணமாக சாவடைந்தார். இவர், வல்வெட்டித்துறை, நெடியகாடு, மானாங்கேணியைப் நிரந்தர முகவரியாகவும் 3ஆம் யூனிற், யோகபுரம், மல்லாவியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்டவர்.

இவருடைய வித்துடல் நேற்று இரவு7 மணியளவில் வடமராட்சி அரசியல்துறை செயலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் அவரது சொந்தஇடமான வல்வெட்டித்துறை நெடியகாட்டுக்கு ஏடுத்துச்செல்லப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு மீண்டும் ஆள்சேர்ப்பு

கொழும்பு,பெப்.26

இலங்கை இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கை மீண்டும் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இராணுவ முகாம்களிலும் பிரதேச செயலகங்களிலும் இடம்பெறும் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 5 அடி 4 அங்குலம் உயரத்துக்குக் குறையாத திருமணமாகாதவர்கள் விண்ணப்பிக்கலாம். தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி வழங்கப்படும்.

ஐ.நா.அமைதிப் படையில் பணியாற்றுவதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு கிடைக்கும் என்று கவர்ச்சியான விளம்பரங்கள் செய்யப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சுப் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்ட

## இ.தொ.காங்கிரஸ் இப்போது இரண்டும்கெட்டான் நிலையில்!

கொழும்பு,பெப்.26

எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றமாகிவிட்டன. உத்தரவாதங்கள் எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டுவிட்டன. பெரும் நம்பிக்கைக் கனவுகளுடன் அரசுக்கு முட்டுக்கொடுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று அரசுக்குள் செல்லாக்காசாக்கப்பட்டு அந்தரிக்கின்றது. வீறாப்புடன் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்து அரசைவிட்டு வெளியேறிவிட்டதாக அறிவித்துவிட்டு அது இரண்டும் கெட்டான் நிலையில் அது அந்தரித்துக்கொண்டிருக்கிறது.

மலையகத்தில் சிறுவர் பூங்கா ஒன்று திறப்பதில் ஏற்பட்ட சர்ச்சைதான் இப்போது பூதாகரமாகி நிற்கின்றது என்று கூறப்பட்டாலும் தனிப்பட்ட ஒரு சிறுவர் பூங்கா விவகாரம் மட்டும்தான் இ.தொ.காவின் இப்போதைய இழுபறி முடிவுக்கான காரணம் அல்ல என்றும் கூறப்படுகின்றது. இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு எந்தவிதமான அமைச்சுப் பொறுப்பு களையும் வழங்கமுடியாது என ஜனாதிபதி அறிவித்தபின், ஜனாதிபதியைச் சந்திக்கப் பல முறை வாய்ப்புக்கேட்டும் அதை வழங்க ஜனாதிபதி சந்திரிகா மறுத்துவந்துள்ளார் எனக் கூறப் படுகின்றது.

கடைசியாக அமைச்சர் முத்துசிவலிங்கமும் பிரதி அமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமியும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யும் கடிதங்களை ஒப்படைத்த பின்னரும்கூட ஜனாதிபதி இ.தொ.காவினரைச் சந்திக்க மறுத்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான

## பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் பங்கு; மு.காங்கிரஸ்-கூட்டமைப்பு நேற்று ஆராய்வு

கொழும்பு,பெப்.26

ஆழிப்பேரலை நிவாரணப்பணிகளுக்காக வடக்கு-கிழக்கில் அமைக்க உத்தேசிக்கப்படும் பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களும், தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தலைவர்களும் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், என்.ரவிராஜ், சுரேஸ்பிரேமச்சந்திரன், சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் குழுவில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான பசீர் சேகுதாவூத், ஹசன் அலி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையின் பின்னர் உள்ள நிலைமை, கிழக்கில் அரசுமேற்கொள்ளும் திட்டமிட்ட குடியேற்றங்கள், ஆழிப்பேரலை பாதிப்புக்குள்ளானோருக்கான மீள்கட்டுமானம் ஆகியன தொடர்பாக இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர்.

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கவென அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம், பங்களிப்பு ஆகியன தொடர்பாகவும் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழுவினர் இன்று பருத்தித்துறைக்கு

குருநகர்,பெப்.26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை அபிவிருத்திசெய்வது தொடர்பாக ஆராய்வதற்கென இந்திய உயர்மட்டக் குழுவொன்று இன்று காலை பருத்தித்துறைக்கு விஜயம் செய்கிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி நிருபமாராவ், இந்திய அரசின் சுகாதாரத்துறை மேலதிக செயலாளர் மற்றும் இந்திய அதிகாரிகள் ஆறுபேர் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்களுடன் வடக்கு-கிழக்கு மாகாண

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் சாள்ஸை வரவேற்க காத்திருக்கின்றார்கள் புலிகள்!

கொழும்பு,பெப்.26

இங்கிலாந்தின் இளவரசர் சாள்ஸின் குறுகியகால இலங்கைப் பயணத்தின்போது ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்புக்கும் அவர் செல்லவிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது. அவருடன் கலந்துரையாடப் புலிகள் விருப்பமாக இருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. இது குறித்துப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் ரோய்ட்டருக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:-

சாள்ஸை முழுமனதுடன் வரவேற்பதுடன், அவருடன் கலந்துரையாடுவதையும் விடுதலைப் புலிகள் அமைப்பும் தமிழ்ச் சமூகமும் விரும்புகின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கு

## மேலும் ஏழரைக்கோடி டொலர் நிதி உலகவங்கி இலங்கைக்கு வழங்கும்

வாஷிங்ரன்,பெப்.26

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் மீள்கட்டுமானப் பணிகளையும் மீட்புப் பணிகளையும் மேற்கொள்வதற்கென உலக வங்கி மேலும் 7 கோடி 50 லட்சம் டொலர் நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

இதன்மூலம் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக 15 கோடி டொலர் உதவியை உலக வங்கி இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதற்கான அங்கீகாரம் நேற்று வழங்கப்பட்டது.

பேரனர்த்தம் நிகழ்ந்த உடனே அவசர மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கென இந்தமாத ஆரம்பத்தில் 7 கோடி 50 லட்சம் டொலர் நிதியை கடனாக உலகவங்கி வழங்கியது. இப்போது மேலும் 7 கோடி 50 லட்சம் ரூபாவை அது கடனாக வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலையால் அழிந்த இலங்கையின் பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் 150 கோடி டொலர்முதல் 160 கோடி டொலர் வரை நிதி உதவி தேவையென அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். உலகவங்கியின் நிதி உதவியின் மூலம் புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படைவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த நிதி செலவிடப்படும் என்று உலக வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர். (த-க)

## புலிகளின் படங்கள் மீது 'பெயின்ட்' விசிறிய கும்பல்

### கண்டியில் நடக்கும் புகைப்படக் கண்காட்சியில்!

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் 'சமாதானத்தில் ஏ-9 பாதையின் முக்கியத்துவம்' என்ற தொனிப் பொருளிலான புகைப்படக் கண்காட்சி ஒன்று கண்டி 'குயின்ஸ்' விடுதியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைபெற்று வருகிறது. மூவினங்களையும் சேர்ந்த ஏராளமான மக்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கண்காட்சியின் இரண்டாவது நாளான நேற்று கண்காட்சிக் கூடத்தினுள் புகுந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் புலிகளின் முக்கியஸ்தர்கள், அவர்களது நிர்வாகக் கட்டமைப்புக்கள், மாவீரர்களினது புகைப்படங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகள் மும்முரம்!

## யாழ்.மேலதிக அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானத்துக்கான பணிகள் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன என யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமியால் பாதிக்கப்பட்டுக் குடியிருப்புகளை இழந்த மக்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மணற்காட்டுப் பகுதியில் சுமார் 75 வீடுகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுவிட்டன.

நில அளவைத் திணைக்களம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காணி அளவிடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இதுவரை 650 காணிகள் அடையாளம் இடப்பட்டுள்ளன என அறியப்படுகின்றது.

இவை தவிர நகர அபிவிருத்தி அதிகார சபையும் குடியிருப்புக்களை மீள அமைப்பதற்கான வரைபடங்களைத் தயாரித்து வருகின்றது. மணற்காட்டுப் பகுதிக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுவிட்டது.

இவற்றுடன் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான மற்றும் பல செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றார் அவர்.

(த-202-204)

## அழகுக்கலை வகுப்புகள் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.26

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்றும் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த பிரபல அழகுக் கலை நிபுணர் திருமதி பிறேமா ஜெகனின் அழகுக் கலைப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் 7 ஆம் திகதிகளுககுப் பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(த)

# நுண்கலைக் கல்லூரியின் ஓவியப் போட்டி நாளை

## அனுமதி அட்டை கிடைக்காதோரும் தோற்றலாம்

யாழ்ப்பாணம்,பெப்.26

தமிழீழ நுண்கலைக் கல்லூரி நடத்தும் மாபெரும் ஓவியப் போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லை மாவட்ட புதுக்குடியிருப்பு நுண் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதே போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையிலும் (சாதனா) -

மார்ச் 8 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த ஓவியப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் அந்தந்தப் பரீட்சை நிலையங்களில் குறித்த நேரத்தில் சமுகமளித்து பரீட்சையில் தோற்றலாம் என்றும் -

தமிழீழ நுண்கலைக் கல்லூரிப் பணிப்பாளர் க.தணிகைமாறன் அறிவித்துள்ளார்.

(ஐ)

# மெய்வன்மைப் போட்டிகள்

வலி.தென்மேற்கு,பெப்.26

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம அதிதியாக சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் ந.சண்முகசுந்தரமும் சிறப்புவிருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.செல்வராசாவும் கலந்துகொள்வர்.

(எ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளரும் பழைய மாணவர் சங்க உபதலைவருமாகிய க.மயில்வாகனமும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் இளைப்பாறிய சிரேஷ்ட ஆசிரியை திருமதி மீஅருமைநாயகமும் கலந்து கொள்வர்.

(எ-202)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.26

பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தினர் நடத்தும் 46 ஆவது இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் த.கங்காபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.சிவநேசன், கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(எ-202-204)

# பேடன் பவ[illegible]ன் பிறந்த தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் 148 ஆவது பிறந்த தினம் கடந்த செவ்வாய்கிழமை யாழ்.பரியோவான் கல்லூரி சாரணர்களினால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண உதவி ஆணையாளர் எஸ். செபஸ்ரியாம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் சாரணர் குழு பொறுப்பாசிரியர் எஸ். சிறிதரனும் கலந்துகெண்டனர்.

அத்துடன், இந்த நிகழ்வில் கடந்த வருடம் சாரணர் மதிப்பீடுகளில் வெற்றிபெற்ற சாரணர்களுக்குக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

பரியோவான் கல்லூரியின் குருளைச் சாரணர்கள், கடற்சாரணர்கள், சாரணர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(10-190)

# வேரடிமண் நிகழ்வு இன்று கைதடியில்

யாழ்ப்பாணம்,பெப்.26

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தி வரும் 'வேரடிமண்' பாரம்பரிய கலை விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி மேற்கு பராசக்தி மாதர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு குறித்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரினால் சிதைக்கப்பட்டு மீண்டிட முடியாத நிலையில் உள்ள பாதிக்கப்பட்ட பெண்களின் உளவளத்தினை மேம்படுத்தும் நோக்குடன் தென்மராட்சிப் பிரதேசத்தை மையப்படுத்தி, பெண்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது. 20 கிராமங்களில் இந்த நிகழ்வு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பெண்கள் தலைமைத்துவம் ஏற்றல், பாரம்பரிய நிகழ்வுகளை வளர்த்துக் கொள்ளல், கூட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்க இந்நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்நிகழ்வில் பெண்களும் சிறுவர்களுமே பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது.

(எ-204)

# சிரியா உதவியது என்ற கிளர்ச்சிவாதிகளின் வாக்குமூலத்தை அந்நாட்டு அரசு நிராகரிப்பு

பெய்ரூட்,பெப்.26

"தமக்கு சிரியப் புலனாய்வுச் சேவைகள் மூலம் இராணுவ மற்றும் ஏனைய பயிற்சிகள் வழங்கப்பட்டன " - என்று ஈராக் கிளர்ச்சிவாதிகள் தொலைக்காட்சியொன்றில் தெரிவித்திருந்த வாக்குமூலங்களை - தகவல்களை - சிரிய அரசு நிராகரித்துள்ளது.

ஈராக் கிளர்ச்சிவாதிகள் வெளியிட்டிருக்கும் மேற்படி கருத்துக்கள் எவ்வித ஆதாரங்களும் அற்றவை என்று சிரியாவின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர் என அந்நாட்டின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

ஈராக் இடைக்கால அரசால் நடத்தப்படும் 'ஈராக்கியா' என்ற தொலைக்காட்சியில் கிளர்ச்சியாளர்கள் சிலர் வழங்கிய கருத்துக்கள் - தகவல்கள் - ஒளிபரப்பப்பட்டன.

உலக அரங்கில்

அதில் தமது நிதித் தேவைகளுக்கும் இராணுவப் பயிற்சிகளுக்கும் சிரியா உதவியதாக கிளர்ச்சிவாதிகள் தெரிவித்திருந்தனர்.

பிடித்துவைக்கப்படும் பணயக் கைதிகளை சிரச்சேதம் செய்வது எப்படி என்ற பயிற்சிகளையும் சிரியா தமக்கு வழங்கியதாக அந்தக் கிளர்ச்சிவாதிகள் மேலும் அத்தொலைக்காட்சியின் ஊடாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கருத்துக்கள் சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஏற்கனவே, ஈராக்கில் செயற்படும் கிளர்ச்சிவாத அமைப்புகளுக்கு சிரியா உதவிசெய்து வருவதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஈராக்கியா என்ற தொலைக்காட்சி ஊடாகக் கிளர்ச்சியாளர்கள், சிரியாவே தமக்கு இராணுவப் பயிற்சிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கியது என்று தெரிவித்திருக்கின்றமை சிரியாவில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

லெபனானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரியின் படுகொலைக்குச் சிரியாவே காரணம் என்ற குற்றச்சாட்டு இன்னொரு பக்கமும் இருப்பதாக இந்தச் சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்களில் எதுவித உண்மையுமில்லை என்று கூறியிருக்கும் சிரியா மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை.

(க-8)

# பலஸ்தீன அமைச்சரவையை நாடாளுமன்றம் அங்கீகரிப்பு

பலஸ்தீனத்தில் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அமைச்சரவையை அந்நாட்டு நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது - அங்கீகரித்துள்ளது.

புதிய அமைச்சரவையை அங்கீகரிப்பதற்கான வாக்கெடுப்பு பல நாள்கள் நீடித்த காரசாரமான விவாதங்களின் பின்னரே இடம்பெற்றுள்ளது. அவ்வாறு பின்னடைவுகளைக் கொண்டு முன்னேறிய விவாதங்களில் பிறகு முன்னேற்றம் காணப்பட்டது என்றும் -

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் புதிய அமைச்சரவையை ஆதரித்து வாக்களித்தனர் என்றும் - ரமல்லா செய்திகள் தெரிவித்தன.

(க-8)

# உலக சனத்தொகை 45 ஆண்டுகளில் மேலும் 40 சதவீதத்தால் அதிகரிக்கும்

உலக சனத்தொகை 2050 ஆண்டளவில் இப்போதுள்ளதைவிட 40 சதவீதத்தால் அதிகரிக்கும். அந்த வளர்ச்சி வீதம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்பட்டபோதிலும் வளர்ந்துவரும் நாடுகளிலேயே மிக அதிகமாகக் காணப்படும் என்று ஐ.நா. ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

- சனத்தொகை தொடர்பாக ஆய்வுசெய்யும் ஐ.நா. அமைப்பின் புதிய தலைவர் ஹனியா ஸ்லொட்னிங் இத்தகவலைக் கூறினார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

2050 ஆண்டளவில் உலக சனத்தொகை 910 கோடியால் அதிகரித்துக் காணப்படும் 2005 முதல் 2050 இற்குள் இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, கொங்கோ, பங்களாதேஷ் உகண்டா, அமெரிக்கா, சீனா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் வாழ்வோர் எண்ணிக்கை உலக சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாக இருக்கும்.

ஐ.நா. சனத்தொகை தொடர்பாக ஆய்வு செய்யும் அமைப்பின் முன்னைய தரவின்படி குறைந்தளவில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி 530 கோடி முதல் 780 கோடி வரையில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி 120 கோடிக்கு மேல் வளர்ச்சியடையாது இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலை உலகுக்கு மேலும் பளுவை ஏற்படுத்தும். ஏற்கனவே சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும் ஏழ்மை காரணமாகவும் சுகாதார, கல்விப் பிரச்சினையை எதிர்நோக்கி வரும் நாடுகள் அவற்றுக்குத் தீர்வு காணாவிட்டால் சனத்தொகை அதிகரிப்பால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

(க-8)

# லெபனானிலிருந்து சிரியப் படைகளை வெளியேற்றுவது தொடர்பில் முடிவு

பெய்ரூட்,பெப்.26

சிரியாவின் படைகள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இருந்து வெளியேறுவது தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக லெபனானின் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

சிரியாவின் எல்லைக்கருகே பெக்காப் பள்ளத்தாக்குக்கு சிரியப்படைகளை மாற்றுவது தொடர்பில் சரியான ஒரு காலப்பகுதியை நிர்ணயிப்பது குறித்து சிரிய - லெபனான் இராணுவ அதிகாரிகள் ஏற்கனவே பேச்சுகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அமைச்சர் கூறினார்.

லெபனானில் இருந்து சிரியப் படைகள் முற்றுமுழுதாக வெளியேறுவதற்கு முன்னதாக அவை பெக்கா பள்ளத்தாக்குக்கு மாற்றப்படுவதை வலியுறுத்தும் தைவ் உடன்படிக்கைக்கு ஏற்ப நடக்க சிரியா முன்னர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெக்கா பள்ளத்தாக்குக்குப் படைகளை இடம்மாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(க-8)

# 'டிசெம்பர் 26' நிலநடுக்கத்தால் கடல் படுக்கையில் பிளவுகள்

## ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கியாடோ,பெப்.26

இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவுக்கு அருகில் டிசம்பர் 26 ஆம் திகதி கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக கடல் அடிப்பகுதியில் பிளவுகள் ஏற்பட்டுள்ளதை ஜப்பானின் ஆராய்ச்சிக் கப்பலான நட்சுஷிமா கண்டறிந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தண்ணீருக்கடியில் சுமார் 3 கிலோ மீற்றர் ஆழம் வரையில் சென்று ஆய்வு மேற்கொள்ளக் கூடிய நட்சுஷிமா கப்பலில் அதி நவீன கமராக்கள் மற்றும் ஒலியைப் பதிவுசெய்யும் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அந்தக் கப்பலின் ஆய்வுத் தகவல் குறித்து ஜப்பானிய ஆய்வாளர்கள் கூறியதாவது:-

கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கம் ஏற்படுத்தும் மாற்றங்களைக் கண்டறியவும் முதன் முதலாக ஒளிப்பதிவு காட்சிகளுடன் அவற்றை உறுதிசெய்து கொள்ளவும் நட்சுஷிமா கப்பல் உதவியாக இருந்தது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் பண்டா அச்சே பகுதியிலுள்ள சுண்டாவில் சாய்வான பரப்பில் கடலுக்கடியில் சுமார் இரண்டாயிரத்து நூறு - இரண்டாயிரத்து முந்நூறு மீற்றர் ஆழத்தில் விரிசல்களும் பிளவுகளும் ஏற்பட்டுள்ளன.

அந்தப்பிளவுகளின் முனைகள் இன்னும் கூர்மையாக இருப்பதனால் அவை அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உருவானவை என உறுதியாகக் கூறமுடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

(க-8)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# வெறும் வாய்ப்பேச்சால் பயன் ஏதும் கிட்டாது

"கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றானாம்!" - என்ற பேச்சுமொழி குறித்து இப்பத்தியில் சில தடவைகள் பிரஸ்தாபித்திருக்கின்றோம். இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சுக்கள் மூலம் - தீர்வுகாண்போம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது அரசும் கூறிவருவதை அவதானிக்கும்போது இந்த முதுமொழி தான் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருகின்றது.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை அதன் தேசியப் பிரச்சினையாக நாட்டையே உலுப்பிவரும் விவகாரம் இனப் பிணக்கும் அதனால் ஏற்பட்ட பூசலும், மோசமான போரும் தான்.

அந்தப் பிரச்சினை விடயத்தில்கூட தன்னுடைய நிலைப்பாடு இதுதான் என்பதைத் தெளிவுபடுத்தமுடியாமல் குழம்பி நிற்கின்றது சந்திரிகாவின் அரசு.

"வடக்கு - கிழக்குத் தமிழ்மக்களின் உடனடி மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்துக் கையாள்வதற்காக இடைக்கால அதிகாரசபை ஒன்றை அமைப்பது பற்றி முதலிலும், இறுதித்தீர்வு குறித்து அதைத் தொடர்ந்தும் புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது" - என அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

யுத்தநிறுத்தத்துக்கு வழிசெய்த அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அரசின் ஊடகத்திணைக்களம் விடுத்த அறிக்கையிலேயே இப்படித் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசின் இந்த நிலைப்பாட்டைக் கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தமது உரை மூலம் உறுதிப்படுத்தினார்.

அதுமட்டுமல்ல, அடுத்தநாள் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர், "முதலில் இடைக்கால அதிகாரசபை ஏற்பாடு குறித்துப் பேச்சு, அடுத்து இறுதித்தீர்வு பற்றிப் பேசுதல் என்பது அரசின் புதிய நிலைப்பாடல்ல. இது பழைய நிலைப்பாடுதான். இது விடயத்தில் அரசு தனது நிலைப்பாட்டை இப்போது தான் மாற்றிக்கொண்டுள்ளது என்று கூறப்படுவது தப்பு." - எனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால், அதற்கு அப்படியே முரண்பட்டுக் கருத்து வெளியிட்டிருக்கின்றது ஜே.வி.பி.

ஆளும் தரப்பில் மூன்றில் ஒரு பங்கு எம்.பிக்களைக் கொண்ட - ஆளும் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான - ஜே.வி.பியோ, இடைக்கால அதிகாரசபை என்ற பேச்சுக்கே இடமில்லை. அது கூட்டமைப்பின் இணக்கமான நிலைப்பாடும் அல்ல என்று அடித்துக் கூறுகின்றது. புலிகளுடன் இறுதித்தீர்வை விடுத்து, இடைக்கால அதிகார சபை குறித்து முதலில் பேசவிரும்புபவர்கள், அது அரசுக் கூட்டமைப்பின் கொள்கை முடிவாக இல்லாததால் அரசை விட்டு வெளியேறலாம் என்றும் அறிவிக்கிறது ஜே.வி.பி.

வெறுமனே நாடாளுமன்றில் வாய்ப்பேச்சாக இவ் விடயத்தைக் கூறுவதோடு மட்டுமல்லாமல், பத்திரிகையாளர் மாநாடு கூட்டியும் அதை அறிவிக்கின்றது ஜனாதிபதி சந்திரிகா அமைத்துள்ள கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் ஜனாதிபதி செயலகம் விடுத்த உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பில் -

"ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாகக் கிடைக்கும் உதவிகளைச் சமனாகப் பகிர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக புலிகளுடன் சேர்ந்து செயற்பாட்டுத்திட்டம் ஒன்றை நிறுவுவதில் இலங்கை அரசு பற்றுறுதியாக உள்ளது என்பதை இச்சந்திப்பில் ஜனாதிபதி மீள உறுதிப்படுத்தினார்." - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்காகப் புலிகளுடன் சேர்ந்து அரசு பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதைத் தாங்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள் என்று ஜே.வி.பியினர் பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றனர்.

அமைதி முயற்சிகள், இணக்க ஏற்பாடுகள், சமாதான வழிமுறைகள், புரிந்துணர்வு எத்தனங்கள் போன்றவை தொடர்பான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தன்னுடைய அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளுடன் ஒரு கொள்கை ரீதியான உடன்பாட்டுக்கோ, அடிப்படை இணக்கத்துக்கோ வரமுடியாத ஜனாதிபதி குமாரதுங்க -

அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதற்கான ஆதரவுப் பலத்தைத் தென்னிலங்கையில் ஆகக் குறைந்தது தனது அரசுக்குள்ளாவது திரட்ட முடியாத ஜனாதிபதி குமாரதுங்க -

சமாதானப் பேச்சு மூலம் அமைதித் தீர்வைக் காண்பேன் என்று சர்வதேச சமூகத்துக்கு 'கயிறு விடுவது', நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றானாம்' என்ற கதை மாதிரித்தான் உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இன்றைய நிலைமையைப் பார்த்தால், அமைதிப்பேச்சு, சமாதான முயற்சி, இணக்கத்தீவு, நிலையான அமைதி என அவர் முழங்குவதெல்லாம் வெறும் வாய்ச்சவடால் அன்றி வேறில்லை என்பது தெளிவாகின்றது.

# பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான நிதியை இலங்கை அரசிடம் கையளிக்கமாட்டோம்

## சர்வதேசக் கல்வியக ஆசிய - பசுபிக் பிராந்திய இணைப்பாளர்

யாழ்ப்பாணம், பெப். 26

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தில் அழிந்துபோன மற்றும் சேதமடைந்த பதினொரு பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு சர்வதேச கல்வியகத்தினால் வழங்கப்படும் நிதி நேரடியாக இலங்கை அரசிடம் கையளிக்கப்படமாட்டாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் சர்வதேச கல்வியகத்தின் ஆசிய - பசுபிக் பிராந்திய இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த சர்வதேச கல்வியகத்தின் அதிகாரிகள் அன்றிரவு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிந்த மற்றும் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு சர்வதேச கல்வியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏழு பாடசாலைகளும் தென்னிலங்கையில் நான்கு பாடசாலைகளும் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

வடக்கில் அழிவடைந்த பாடசாலைகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளவுள்ளன என்றும் -

அதனால் கிழக்கு மாகாணத்தில் ஏழு பாடசலைகளையும் தெற்கில் நான்கு பாடசாலைகளையும் புனரமைப்புச் செய்வதற்குள்ளோம். எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் தென்னிலங்கையில் மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் புனரமைப்புத் திட்டம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினூடாக நடைபெறும் என்றும் அக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (10-7)

# ஆயிரத்து 500 இலங்கையர்களுக்கு இத்தாலியில் இந்தஆண்டு வேலைவாய்ப்பு

கொழும்பு, பெப். 26

ஆண்டுதோறும் வெளிநாட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இத்தாலிய அரசு இந்த ஆண்டில் ஆயிரத்து 500 இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

ஆயினும், இவர்கள் அனைவரும் இலங்கை அரசின் ஊடாகவோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் ஊடாகவோ இத்தாலிக்குச் செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு இருபது ஆயிரம் யூரோவை வருமானமாகப் பெறும் இத்தாலியில் வசிக்கும் ஒருவர் தனது தேவைக்காக அழைத்தால் மட்டுமே இவர்கள் அங்கு செல்லமுடியும்.

இத்தாலிய அரசு எதிர்பார்க்கும் வருடாந்த வருமானம், பணியாளர் ஒருவரது தங்குமிட வசதிகள், சுகாதார வசதிகள் மற்றும் பணியாளரின் பணி தொடர்பான பாதுகாப்பு ஆகியவற்றை உடைய ஒருவர் அந்நாட்டுத் தொழில் அமைச்சின் ஊடாகவே இவர்களை அழைத்துக்கொள்ளமுடியும்.

கடந்த ஆண்டுகளில் பணியாள் ஒருவரை அழைத்துச்செல்லும் நபரின் வருடாந்த வருமானம் 44ஆயிரம் யூரோவாக இருக்கவேண்டும் என்பதே இத்தாலிய அரசின்நிபந்தனையாகஇருந்தது. ஆனால், இந்த ஆண்டில் வருடாந்த வருமானம் 20 ஆயிரம் யூரோவாகக் குறைக்கப்பட்டுள்ளது. (10-206)

# மாணவர் எழுச்சி நாளையொட்டி 'பாண்ட்' வாத்திய இசைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 26

தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி யாழ். மாவட்ட மாணவர் அமைப்பினர் பாடசாலைகளுக்கிடையிலான 'பாண்ட்' வாத்திய இசைப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 'பாண்ட்' வாத்திய அணியினரின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியின்போது பாண்ட் வாத்திய அணியினர் பாடசாலைக்கீதம், பொதுக் கீதம் என்பவற்றை மட்டும் இசைப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

வலயமட்டப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறும்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்ளும் பாண்ட் வாத்திய அணியினர் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகத்துடனோ அல்லது மாணவர் அமைப்பினருடனோ தொடர்புகொண்டு விண்ணப்பங்களையும், மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஷ்ணா தெரிவித்துள்ளார். (10-13)

# பெண்கள் பங்குபற்றும் 'அரங்காலய' ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 26

பெண்கள் பண்பாட்டு மையத்தினால் நடத்தப்பட்டுவரும் 'அரங்காலய' ஒன்றுகூடல் நாளை ஞாயிறு காலை 10.00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் (நல்லூர் பின் வீதி) நடைபெறவுள்ளது. இந்த ஒன்றுகூடலில், பெண்கள் ஒன்று கூடிப் பிரச்சினைகளைப் பகிர்ந்து, எதிர்காலம்பற்றிய புதிய சிந்தனைகளைக் காணவும் அதற்காகச் செயற்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இது பற்றிய மேலதிக விடயங்களை 0212223940 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (ஐ)

# தமிழினம் பொறுமையின் விளிம்பில் நிற்பதை உலகிற்கு உணர்த்துவோம்

## 3ஆண்டு நிறைவையொட்டி பத்மினி சிதம்பரநாதன் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

தொடர்ந்து ஏமாற்றங்களைச் சந்தித்து வரும் தமிழ் இனம் பொறுமையின் விளிம்பில் நிற்கின்றது என்ற செய்தியை சர்வதேச சமூகத்துக்கு உரத்துச் சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது.

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்.

அரசு - புலிகள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைந்ததையொட்டி விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 3 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதால் மக்களுக்கு ஓர் ஆறுதல் கிடைத்திருக்கின்றது. ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னும் மீட்கப்படவில்லை. உழைப்புக்கான அவர்களின் வளம் பொருந்திய நிலங்கள் மீட்கப்படாது உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்திடம் உள்ளன.

உழைப்புக்கான அவர்களின் கடல்களில் சுதந்திரமாகத் தொழில் செய்யும் நிலைமை இன்னும் வரவில்லை. அது கடற்படையிடம். ஆனால், மறுபக்கம் தெற்கில் வாழ்க்கை சுமுகம் அடைந்துள்ளது. கொழும்புத் தெருக்களில் அச்சமின்றி நடமாடமுடிகின்றது. தெற்குப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடிந்தது. இந்த வகையில் கிடைத்த ஆறுதலில் கூட இனங்களுக்கிடையேசமமற்றதன்மைஇருக்கின்றது.

இந்த நேரத்தில் தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் முழுமூச்சாகப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகாண உழைக்காமல் தமது பதவிப் போட்டிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் 3வருடங்களாக பேச்சு இழுத்தடிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல தமது இனவாதக் குரோதங்களையும் அடிக்கடி வெளிப்படுத்துகின்றனர்.

இது தமிழ் மக்களுக்கு வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஊட்டி பொறுமையின் எல்லைக்குக் கொண்டு வந்திருக்கின்றது. இதைச் சர்வதேசத்திற்குத் தமிழ் மக்கள் எல்லோரும் சேர்ந்து தெரியப்படுத்தவேண்டும். ஏனெனில், சர்வதேசம் யுத்தமின்றிய நிலைமையை 'பெரும் சாதனை' எனக் கருத்திற்கொண்டு ஆறுதல் அடைந்துவிடக்கூடும் என்ற மனக்கிலேசமும் தமிழ் மக்களுக்கு உண்டு.

நாம் பாடுபட்டது யுத்தமில்லாத நிலைமையை மட்டும் அடைய அல்ல. தமிழ் மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தமிழர் தாயகப் பகுதிகளில் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டு தமிழ்மக்கள் அழிக்கப்பட்டபோதுதான் வேறு வழியின்றி யுத்தத்தை தெரிவுசெய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

நாங்கள் அடிப்படையில் வேண்டுவது சுதந்திரத்தை. இதனை நாம் உலகத்துக்குச் சொல்லவேண்டும். இதற்கென நாங்கள் கிராமம் கிராமமாகவும் பிரதேசங்களாகவும் மாவட்டங்களாகவும் தேசம் தழுவியும் அணி திரள்வதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### நாளை

*மாசி 15*
*ஞாயிற்றுக்கிழமை*
*27.02.2005*
*திதி : திருதியை*
*பிற்பகல் 1.14 வரை*
*நட்சத்திரம் : அத்தம்*
*பிற்பகல் 5.40 வரை*
*சங்கடஹர சதுர்த்தி*
*சுபநேரம் : 9.28-10.58*
*ராகுகாலம் : 4.58 - 6.28*
*(யாவும் பழைய நேரப்படி)*

### உதயவாக்கு

கெட்டவன் நெருங்கியவனாக இருந்த போதிலும்; விஷம் ஏறிய விரலைத் துண்டிப்பது போல், அவன் விலக்கப்படவேண்டியவன்.

- கவி காளிதாசன்

# பாதிப்புற்ற மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை வாலிபர் சங்கம் உதவி

வட்டுக்கோட்டை, பெப். 26

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் துவிச்சக்கரவண்டி மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க வுள்ளது.

அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான வடமராட்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்துவாலிபர் சங்கத் தலைவர் சி.சிவதரன் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு இந்துவாலிபர் சங்க கல்யாண மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (8-161)

## மன்னிக்கத் தெரிந்த உள்ளம் மாணிக்கக் கோயில்

**தவக்காலச் சிந்தனை**

மன்னிக்கும் இறைவன், மனம் மாறிய மனம் திருந்திய பாவியை மகிழ்வோடு வரவேற்கின்றார். பணத்தையெல்லாம் பாவத்திலேயே கரைத்துப் பாவம் எனும் நோயில் மூழ்கி மடிகின்ற நிலையிலுள்ள மகனைக் கண்ட தந்தை ஓடோடிப்போய் கட்டித்தழுவி வரவேற்கின்றார்.

அவனது பாவ நோயைப் பாசத்தால் கழுவி, பாசம் - அன்பு - பரிவு என்னும் ஆடைகளை அணிவித்தார்.

காணாமற்போன ஆடாய், வழி தவறிய குட்டியாய், பாவத்தில் உழன்ற இளைய மகனாய் உருமாறிப் போன நாம் எமது நிலையை உணர்வோம்; எழுவோம். எமது இறை தந்தையிடம் செல்வோம்.

மன்னிப்போம் மறப்போம்
மன்னிப்பு அடைவோம்.
மாணிக்கக் கோவிலாவோம்.

**பதினெட்டாம் நாள்** பூவிலிங்கம் - ஜெயவதனி.


# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைக்கு தெரிவான மாணவர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவான 55 பேரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி கற்கைநெறிக்குத் தெரிவானவர்கள் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு வருகைதந்து பதிவுகளை மேற்கொண்டு விரிவுரைகளில் கலந்துகொள்ளலாம் எனக் கற்கை நிலையப்பணிப்பாளர் பேராசிரியர் க.சித்திர வடிவேல் தெரிவித்துள்ளார்.

கற்கைநெறிக்குத் தெரிவானவர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஆறுமுகம் அமலன் (புதுக்குடியிருப்பு), சோமலிங்கம் கோடீஸ்வரன் (சுதந்திரபுரம், உடையார் கட்டு), செல்லன் ஜெயக்குமார் (மாணிக்கபுரம், விசுவமடு), அமலதாசன் லிவின்ரன் விஸ்வபெர்னாண்டோ (பேசாலை, மன்னார்), ஜோசின் இமகுலற்றா லம்பேட் (மன்னார்), குமாரசாமி விபீசன் (புதுக்குடியிருப்பு) -

பேரின்பநாதன் வர்மன் (புதுக்குடியிருப்பு), சிவராஜா குகனேஸ்வரன் (புதுக்குடியிருப்பு), சிதம்பரப்பிள்ளை டைசீலன் (புதுக்குடியிருப்பு), மேரிஜக்குலின் பிரான்சிஸ் (புலோப்பளை கிழக்கு), அந்தோனி தேவநாதன் லம்பேர்ட் (மன்னார்), இதய கிரிஷ்டா லம்பேர்ட் ஜேம்ஸ் (மன்னார்) -

சிவசிதம்பரம் மதீசன் (முள்ளியவளை), தவராசா தர்ஷன் (உக்குளான்குளம், வவுனியா), மகாதேவன் கிருபானந்தன் (புதுக்குடியிருப்பு), செல்வராஜா தயாளன் (புதுக்குடியிருப்பு), சின்னத்தம்பி ராகுபதி (கண்டாவளை, பரந்தன்), கணேசபிள்ளை செந்தீபன் (தண்ணீரூற்று) -

மகேஷன் உதயசங்கர் (கிளிநொச்சி), தவகானம் அன்ரன் விஜயகுமார் (புதுக்குடியிருப்பு), பிருந்தா முரளிதரன் (வட்டுக்கோட்டை), கிருஷ்ணராஜா பிருந்தாவன் (நெல்லியடி கிழக்கு), சிவலிங்கம் கௌசல்யா (சிவன் வீதி, திருநெல்வேலி), இராசலிங்கம் கார்த்திகேசன் (கல்லாரை மல்லாகம்) -

சந்திரசேகரம் சசிகுமார் (ஐயனார் கோயிலடி, சுன்னாகம்), பற்குணலிங்கம் ஜெயந்தன் (ஐயனார் கோயிலடி, சுன்னாகம்), கனகரத்தினம அரியரத்தினம் (ஏழாலை தெற்கு), மதிவதனி செல்லத்துரை (அச்சுவேலி தெற்கு), பிரியதர்சினி புவனேஸ்வரன் (சங்கத்தானை), பரமு பாலகுமார் (நயினாதீவு) -

இராஜரத்தினம் வசீகரன் (நவாலி தெற்கு), ராதிகா இராஜேந்திரா (சந்தைவீதி, ஆவரங்கால்), குணரத்தினம் ஐங்கரன் (மயிலங்காடு), பிரியதர்சினி பரமயோகராஜசிங்கம் (கற்கோவளம், பருத்தித்துறை), கலைவாணி நவரத்தினம் (கெருடாவில் தெற்கு) -

நற்குணம் றமணன் (இன்பருட்டி), தாரணி இராஜேந்திரம் (ஊரெழு கிழக்கு), சரவணபவன் சாரத்திலகன் (கல்வியங்காடு), இருதயதாஸ் அமலதாஸ் (அல்வாய் வடக்கு), கந்தசாமி சுதேஸ் (அல்வாய் வடக்கு) -

லஜிதா பாலசுந்தரம் (கோப்பாய் தெற்கு), செல்வரதி செல்வராஜா (கோப்பாய் மத்தி), தர்ஷினி செல்வராஜா (புலோலி மத்தி), பரமனாந்தன் அஜந்தன் (டச்றோட், உடுவில்), சினனத்துரை சத்தியசீலன் (டச்றோட், உடுவல்)-

சுவரத்தினம் சிவநேசன் (அல்வாய் தெற்கு), சிவலிங்கம் ரூபன் (சித்தன்கேணி), செல்வராஜா சதீஸ்குமார் (மந்துவில் கிழக்கு), கோகுலன் செல்லத்துரை (ஆவரங்கால் மேற்கு), பாலசிங்கம் பேரின்பன் (மீசாலை கிழக்கு) -

கார்த்திகா குணரத்னம் (ஆவரங்கால்), வித்யா வேலும்மயிலும் (புலோலி மத்தி), ஜெயசுபாஜினி ஞானகணேசன் (யாழ்ப்பாணம்), தில்லைநாதன் நிதர்சனன் (கந்தர்மடம்), ஸ்ரீபன் ரேகனராஜ் (கரவெட்டி). (எ-13)

# சிறைச்சாலைச் சூழலில் கழிவுகளை கொட்டவேண்டாம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.சிறைச்சாலையின் சுற்றுப்புறங்களில் கழிவுப்பொருள்களையும், குப்பைகளையும் கொட்டவேண்டாம் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில மாதங்களாகச் சிறைச்சாலையின் சுற்றுப்புறங்களிலும், மதில் ஓரங்களிலும் கழிவுப்பொருள்கள் கொட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதுதொடர்பாகச் சுற்றுமதில்களிலும் உரிய அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், தொடர்ந்தும் இப்பகுதியில் குப்பைகளையும், கழிவுப்பொருள்களையும் கொட்டும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளால் சிறைச்சாலைக் கைதிகளுக்குத் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே, தொடர்ந்தும் இவ்வாறான விஷமதனமான செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-13)

## யாழ். பல்கலையில் ஹிந்தித் திரைப்படம்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் புகழ்பெற்ற இயக்குநர் கோவிந் நிஹலானி உருவாக்கிய 'விருந்து' என்னும் ஹிந்தித் திரைப்படம் தமிழ்த் துணைத் தலைப்புகளுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புவியியல்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

கவிஞர், நாடகாசிரியர், விமர்சகர், எழுத்தாளர், கலை ஆர்வலர் போன்றோரைக் கருப்பொருளாகக் கொண்ட இத்திரைப்படம் கலையின் நோக்கம் பற்றிப் பரிசீலிக்கின்றது.

படக்காட்சியின் இறுதியில் வழமைபோல் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும். ஆர்வலர்கள் வருகைதந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(எ)

## கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டுவிழா

சுழிபுரம்,பெப்.26

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய கையெழுத்துச் சஞ்சிகையான 'சமூகச் சுடர்' 12 ஆவது வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகவும் - வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி கே.கே.ரஜனி, தொல்புரம் கிழக்கு கிராம உததியோகத்தர் ம.சிறீமுருகவேள், நிலையப் போசகர் மு.நமசிவாயம், வலி.மேற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சஞ்சிகையின் வெளியீட்டுரையை வட்டு. மத்திய கல்லூரி அதிபர் என். சபாரத்தினசிங்கியும் மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் சி.கதிர்காமநாதனும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து கலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி தலைமையில் 'கடல் அலையே கடல் அலையே கவலைதான் ஏன் அளித்தாய்' என்ற தலைப்பிலான கவியரங்கம் இடம்பெறும்.(எ-203-28)


## நெஞ்சகலாத நினைவலைகள்

25ஆம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நமசிவாயம் தம்பு
(நில அளவையாளர்)



திருமதி தம்பு தங்கம்மா

*ஈரவிழிகளுடன் எம் இதயத் தெய்வங்களான தாய் தந்தையரை*
*ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றோம்!*
*நெஞ்சின் துயரச் சுவடுகளும், கண்ணின் உதிரிப்பூக்களும்*
*உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன!*
*உங்கள் விழிகள் விழித்திருந்தபோது எங்கள் வாழ்வு*
*மலர்ந்தன – விரிந்தன – மணம் வீசின!*
*உங்கள் யாகத்திற்கு அர்த்தம் காண எம்மிடம் அகராதிகளே இல்லை.*
*எங்கள் வாழ்விற்கு ஒளி காட்டும் தீபங்கள் நீங்களே!*

*"அம்பி கோட்டம்"*
*டச்சு வீதி,*
*கோப்பாய்.* (42478) (24-14)

**- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## அன்பான பழைய மாணவர்களே!

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 2006ஆம் ஆண்டில் நூறாவது வருடத்தை எட்டுகிறது. அத்தோடு, பெருந் துடுப்பாட்டப் போட்டியும் 2006ஆம் ஆண்டில் நூறாவது போட்டியாக நடைபெற இருக்கின்றது.

வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கக் கிளைகளின் அனுசரணையுடனும், இங்குள்ள பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடனும் சங்கத்தின் நூறாவது ஆண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டிய கடமைப்பாடும் கட்டாயமும் எமது தாய்ச் சங்கத்திற்கு உண்டு.

எனவே, பழைய மாணவர்களின் கருத்துகளை - ஒத்தாசைகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக உங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு வசதியாகச் சகல சங்க அங்கத்தவர்களும் உங்கள் முகவரியைக் கீழ்வரும் முகவரியில் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நூறாவது ஆண்டு ஏற்பாடுகள் 2005இல் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதால் இன்றிலிருந்து ஏழு (7) நாள்களுக்குள் கிடைக்கக் கூடியதாக முகவரியை அனுப்பி ஒத்துழைக்கவும்.

பழைய மாணவர் சங்கம்.
யாழ். மத்திய கல்லூரி.
(42480) (24-14)

ந.இராஜதேவன்,
செயலாளர்
57, அம்மன் வீதி, நல்லூர்.
தொலைபேசி: 222 2364



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

26.02.2005




திருநெல்வேலி
பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த
***சிவகுமார்-விஜயதர்சினி*** தம்பதிகளின்
செவ்வப் புதல்வன் செல்வன் ***லக்ஷன்***
தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (26.02.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். லக்ஷனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், பெரியமாமா குடும்பம், சித்தப்பா, சித்திமார், அத்தைமார், அண்ணா, அத்தான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பத்திரகாளியம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க வென வாழத்துகின்றார்கள்.

அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(42467) இ.சிவகுமார்(அப்பா).



## U C MAS மனக்கணிதச் செயற்பாட்டு கல்விப்பிரிவுகள் ஆரம்பம்

உங்கள் பிள்ளைகள் அனைத்துப் பாடங்களிலும் சிறந்து விளங்க வேண்டுமா? புலமைப் பரிசில் பரீட்சையில் குறிப்பிட்ட நேரத்தில் அனைத்துக் கேள்விகளையும் செய்துமுடிக்கவேண்டுமா? அனைத்திற்கும் U C MAS மனக் கணித கல்வித் திட்டம் கைகொடுக்கிறது. உங்கள் குழந்தைகளின் ஒட்டுமொத்த மூளைத்திறன் வளர்ச்சிக்கு அகில உலகக் கோட்பாடு மனக்கணக்கு நடைமுறை எனப்படும் U C MAS மனக் கணக்கு நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. இந்நிறுவனம் ISO 9001 : 2000 தரச் சான்றிதழையும் BOI அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.



இந்நிறுவனம் 05.03.2005 இல் யாழ். மண்ணில் தனது கல்விப் பணியை மானிப்பாய் சந்தை வீதியில் அமைந்துள்ள தலைமை நிறுவனத்தினூடாக ஆரம்பிக்க உள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

* மாணவர் பதிவுகளுக்கு முந்துங்கள்.
* உங்கள் இடங்களிலும் இக்கல்வித் திட்டத்தை ஆரம்பிக்க விரும்புவோரின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (FRANCHISEE).

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**U C MAS கல்வி நிறுவனம் யாழ். கிளை,**
சந்தை ஒழுங்கை,
மானிப்பாய்.
T.P. No.: 021 4591613, 021 222 3201, 0777 797136

(42477) (24-14)

# குட்டித்தீவில் சோகங்களை

# மறந்து ஒரு நாள்...

நெடுந்தீவு - லஷ்மன்

மிகவும் சிறப்பாகவும் எளிமையாகவும் இடம பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இம்முறை தமிழகக் கரையோர மாவட்டங்களில் இருந்து சுமார் 800 போகளும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மூவரும் இலங்கையைச் சேர்ந்த 610 பேரும் கலந்து கொண்டனர். இலங்கை யாத்திரிகர்களில் இந்துக் களே அதிகம் காணப் பட்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட மீனவத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.பி. ராயப்பன்.

நெடுந்தீவுத் துறை முகத்தில் இருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகான சமுத் திராதேவியும் தனியார் படகு அக்குவாட்டியும் பிளாஸ்டிக் படகு மூன் றிலுமாக யாத்திரிகர் படையினரின் பதிவு களை அடுத்து, கச்ச தீவுக்குச் சென்றனர். இந்திய யாத்திரிகர்களுக் கான பதிவுகள் கச்சதீவில் உள்ள படையின ரால் செய்யப்பட்டன.

'ஆதி முதல் அனைத்தையும் ஆளும் பர மனின் ஆவியே வருக' என்ற பக்திக்கீதம் காற்றுடன் கரைந்து கச்சதீவைப் பரவசப்படுத்த புனித அந்தோனியாரின் அருளைவேண்டிப் பக்தர்கள் பிரார்த்திக்க, நெடுந்தீவு பங்குத் தந்தை ஜெபநேசரட்ணம் அடிகளார் மற்றும் பாம்பன் பங்குத்தந்தை அமலராஜ் அடிகளார் ஆகியோரின் தலைமையில் வந்த அருட்திரு. யூட்ஸ்ஸாடன் மற்றும் யாழ். மறைமாவட்டக் குருமார்கள் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுத்தனர்.

கச்சதீவுக்கு இலங்கை - இந்திய நாடு கள் உரிமை பாராட்டியது தெரிந்ததே. தமிழக அரசின் 1972ஆம் ஆண்டின் பெப்ரவரி 16ஆம் திகதிய செய்தியோடு 'தமிழக' இராமேஸ் வரத்திற்கு வடக்கில் 10 மைல் தூரத்தில் இருக்கும் 285 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டதாகவும் தமிழகத்தில் ஜமீந் தார் ஆட்சிமுறை 1948இல் ஒழிக்கப்பட்டதை அடுத்து தமிழக அரசின் ஆட்சிக்கு உட்பட்ட



சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டோர்.

தெனவும் கூறுகிறது.

குஞ்சாட்டி எனப் பெயர்கொண்ட இந்தத் தீவின் அரைப்பங்கு குஞ்சுப்பிள்ளை என்ற தனது மகளுக்கு வேலாயுதம் உடையாரி னால் சீதனமாக வழங்கப்பட்டதெனவும் நெல் விளைவிக்கப்பட்டதாகவும் இங்கு அந்தோனி யாருக்கென கொட்டில் ஒன்றைக் கட்டியது 1819இல் போஞ்சி அந்தோனி என்னும் நெடுந் தீவைச் சேர்ந்தவரே எனவும் 1917இல் வாஸ் அடிகளார் ஆலயக் கட்டடத்திற்கான அடிக் கல்லை நாட்டியதாகவும் நெடுந்தீவில் நீண்ட காலம் வாழ்ந்த கார்த்திகேசு நாகப்பர் கூறியது உண்டு. நெல் வயல்களின் வரம்புகளை இன் றும் காணலாம். அங்கே உள்ள ஒரேயொரு கிணறு 1916இல் கட்டப்பட்டதாகும்.

போஞ்சி அந்தோனியைத் தொடர்ந்து அந் தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் மூப்பராக இருந்துள்ளார். பின்னர் 54 வருடங்கள் வரை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை மூப்பராக வும் சங்கிடுத்தராக கிறகோரி என்பவரும் இருந் துள்ளனர். தற்சமயம் மூப்பராக இருப்பவர் புலவர் அரியநாயம்.

புனித அந்தோனியாரைக் கோடி அற்புதர் என்றும் கூறுவர். அவர் மீது நெடுந்தீவு மக் களுக்கு அசையாத பக்தியும் நம்பிக்கையும் உண்டு. கச்சதீவில் இருந்து உயிருடன் எதை யும் எவரும் எடுத்து வருவதில்லை. பிரயாணத் தின்போது இடையூறுகள் இடம்பெறாமலிருகக இது நம்பிக்கை.

1954இல் "எட்வேட் லோஞ்" எனக் கூறப் படும் 'ஜொய்பின்றோசறி' யாத்திரிகர்களின் பிர யாணச் சேவையில் ஈடுபட்டது. கச்சதீவில் இருந்து நெடுந்தீவை நோக்கி வந்துகொண்டி ருந்த மேற்படி படகு பல மணிநேரங்களாகி யும் கரையைச் சேர்வதாக இல்லை. படகோட் டிக்கு ஒரு சந்தேகம். யாராவது எதையாவது எடுத்துவந்தீர்களா என வினவியபடி நீண்ட நேரத்தின் பின்னர் கரட்டி ஓணான் ஒன்றைக் கைப்பற்றிக்கொண்டார் ஓர் இம்பிளிக்கமான இளைஞர் (வித்தியாசமானவர்களை இம்பிளிக் கமானவர்கள் என்று சொல்வது அன்றைய இளசுகளின் வழக்கமாகும்). அதனைக் குசும் புக்கு எடுத்துவந்திருந்தார். குறிப்பிட்ட ஓணா னை மீண்டு கச்சதீவில் இறக்கிவிட்டுத் திரும் பிய பின்தான் படகு தொல்லைகளின்றி நெடுந் தீவைச் சேர்ந்தது.

நெடுந்தீவு தனி அரசாக விளங்கிய காலம் இருந்தது. அக்காலம் முதலே கச்சதீவு - நெடுந் தீவின் ஒரு பகுதியாக இருந்துள்ளது என் கிறார்கள் முன்னோர்கள். நெடுந்தீவும் கச்ச தீவும் இந்திய - இலங்கை நாடுகளுக்குச் சொந்தமானதல்ல, தனி அரசு என்பதே உணமை.

திருச்சொருப பவனி




அருட்திரு.அமலராஜ் அடிகள் தனது பட கில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்த சமயம, அவர் குறித்துக் கிராம அலுவலர் சண் முகலிங்கத்திடம் கூறிக்கொண்டிருந்தேன். என் னருகில் வந்த அடிகள், எப்படி நலமா என விசாரித்துக்கொண்டார். நான்கு வருடங்களுகளு முன் ஒருநாள் சந்தித்ததை அவர் மறக்க வில்லை.

இம்முறை தமிழக மக்கள் கச்சதீவுக்குச் செல்ல அதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர் எனவும் மேலும் பலர் இங்கு வரவுள்ளனர் என்று கூறிய அடிகளார் மாலையில் சந்திக்க லாம் எனக் கூறிச்சென்றார்.

ப.நோ.கூ. சங்கப் படகு சமுத்திராதேவி யில் இருந்து யாத்திரிகர்கள் கச்சதீவில் இறங்கும் காட்சி.



இந்திய நாட்டுப் படகுகளில் சில.




கச்சதீவுக்கு வந்திருந்த இந்தியர்களில் இளைஞர்கள், இளம் பெண்கள் என 18 முதல் 40 வயதுக்கு உட்பட்ட அநேகர் இருந்தனர். முதல் தடவையாக இங்குவரும் இந்த இளசு களின் முகத்தில் இனியில்லாத மகிழ்ச்சியும் சவர்க்காரம் கிடையாத ஏக்கமும் இருந்தது. இத்தீவை இரு நாடுகளுக்கும் சொந்தமான சுற்றுலா மையமாக மாற்றவேண்டும் எனக் கூறியவர் இளைஞி தமிழ்ச்செல்வி.

பாம்பன் கூட்டுறவு அங்காடியில் பணிபுரி யும் சுரேஸ்பாபு "இரு தேச மக்கள் என்ற வேறுபாடுகளின்றி அன்புடனும் பாதுகாப்புடனும் நாம் வந்த நோக்கததை நிறைவுசெய்கிறோம், இந்தியாவல் பல சாதி மக்கள் என்ற நிலை இருக்கிறது. இங்கே மனித நேயத்தை மட் டுமே காண்பது மகிழ்ச்சியளிக்கிறது" என்றார்.

மண்டபம் முகாமில் உள்ள மக்களை இலங்கை அகதிகளாக நாம் நோக்கவில்லை. எமது சகோதர மக்களாகவே பார்க்கிறோம். அவர்கள் தமக்குத் தெரிந்த தொழில்களைச் செய்ய உதவுகிறோம். மீன் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு மிகக் குறைந்தவிலையில் அவற்றை வழங்குகிறோம் என்கிறார் பிச்சை.

இலங்கைத் தமிழர்களிடத்தில் இந்திய அரசு பாரபட்சம் காட்டுவதையும் இனப்பிரச் சினைத் தீர்வில் சிங்கள அரசுக்குச் சாதக மான நடவடிக்கைகளில் மறைமுகமாக ஈடு படுவதுபோல் தென்படுகிறது என்றும் கூறிய போது, அதை மறுதலித்து இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாரபட் சம் காட்டவில்லை எனப் பாம்பனைச் சேர்ந்த கே.வி.சேவியரும் எஸ்.யோவானும் (தங்கச்சி மடம்) கருத்துத் தெரிவித்தனர்.

கச்சதீவில் கடமையில் ஈடுபட்டிருக்கும் படையினர்.



உடனிருந்த மற்றொருவர் தமிழகத் தமி ழர்கள் மீதே அரசுக்கு அக்கறை இல்லை. உங்கள் மீது எப்படி அக்கறை இருக்கும் என்றார். ராஜிவ்காந்தி தொடர்பான நிகழ்வு களை அவர்கள் மறந்து விடவில்லை என்பதும் பலரது கருத்துகளில் அறியமுடிந்தது. இந் தியா சமாதானத்தை விரும்பும் நாடு என்பது எல்லோரது கணிப்பாக இருந்தது.



பாம்பன் பங்குத் தந்தை அருட்திரு அமலராஜ் அடிகள்.

ராம்ராஜ், ரகு, பிர பாகரன், சரவணகுமார், நிஷா போன்றவர்கள் தமது அனுபவங்களைக் குறித்துப் பேசும் போது எங்களுக்கு இதுபோன்ற தீவுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை. தமிழ்நாட்டில் போன்று இரைச்சல்கள், சத்தங்களற்ற ஓர் அமைதியான இடம். இரு தேச மக்களுக்கி டையிலான கருத்துப் பரிமாற்றங்கள், புரிந்து ணர்வுகள் மனதில் திருப்தி தருகிறது. ஒரு மாறுபட்ட சூழலில் இடம்பெறும் திருவிழா மனதில் நெகிழ்ச்சியைத் தருகிறது என ஏகோ பித்த குரலில் கூறினார்கள்.

## செய்தியாளர்களும் படையெடுப்பு

ஜெயா தொலைக்காட்சியின் இராமநாத புரம் மாவட்ட செய்தியாளர் எம்.ரகு 'லண்டன் தீபம்' தொலைக்காட்சியின் எம்.என்.எம்.அனஸ் றஞ்சித் ஜெயசுந்தரா 'சன்' தொலைக்காட்சி யின் செய்தியாளர் (பெயர் தவறிவிட்டது) 'தினத்தந்தி' பத்திரிகையின் மதுரை மாவட்ட செய்தியாளர் சேதுராமச்சந்திரன் 'தினமலர்' செய்தியாளர்கள் அசோகன், ரதீன்குமார் போன்ற ஊடகவியலாளர்களையும் சந்தித்தேன். தி. மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி பூரண சுகமுடன் இருப்பதாக 'சன்' செய்தியாளர் தெரி வித்தார்.

தமிழக முதல்வர் ஒரு பெண் என்பதால் அவருக்கு பெண்கள் மத்தியில் செல்வாக்கு



திருப்பலிப் பூசைகள்.

இருப்பதாகவும் அடுத்த ஆண்டில் நடைபெற வுள்ள தேர்தலில் மீண்டும் அவருக்கு வாய்ப் புக்கள் இருப்பதாகவும் இங்குவந்த பெண்கள் சிலர் கூறுகிறார்களே என பெண்கள் சிலரிடம் கேட்டேன். அது ஒன்றும் சாத்தியமாகாது என்ற ஒட்டுமொத்தப் பதில் கிடைத்தது.

அடிக்கடி 'பல்டி'யடிப்பது ஐயா ராமதாசின் அரசியல் பாணி. இதனால், தி.மு.க.கூட்டணிக்கு வாய்ப்புகள் குறையலாமல்லவா என்றதற்கு, டாக்டர் ஐயாவின் பாணிக்குக் கூட்டணி கலங் கத் தேவையில்லை. அது மிகவும் உறுதி யாக இருக்கிறது. என்றும் யோவான், சேவியர் போன்றோர் தெரிவித்தனர்.

கச்சதீவு யாத்திரிகர்களின் வசதிகளைக் கவனிப்பதில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் புற்றிக் டிறஞ்சன் வேகமாகச் செயற்பட்டார். வைத்திய அதிகாரி திருநாவுக்கரசு மற்றும் பொலீஸ், கடற்படை, இராணுவத்தினரும் நெடுந் தீவு பிரதேச சபையும் திருப்தியான சேவை களை மக்களுக்கு வழங்கினர். முன்னதாகக் கடற்படையினரே ஆலயச் சூழலைத் துபபுரவு செய்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதித் திருப்பலி சுற்றுப்பிரகாரம் முடிவ டைந்ததும் இரு நாடுகளையும் சேர்ந்த குரு மார்கள் அனைத்து நிலையினருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

அருட்திரு. அமலராஜ் அடிகள் விடுதலைப் போர், 'சுனாமி' அனர்த்தம் காரணமாகத் துன் புற்றிருக்கும் மக்களுக்கு இறையாசி கிட்ட வேண்டிக்கொள்ள, ஜெபநேசரட்ணம் அடி களார் தம்முடன் இணைந்து செயற்பட்ட இரு நாட்டுக் குருமார் உட்பட இந்திய யாத்திரிகர் களுடன் இலங்கையைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் புனித அந்தோனியாரின் அரு ளாசி கிடைக்கப் பிரார்த்தித்தார்.

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திருச்சுற்றுப் பிரகாரத்துடன் விழா நிறைவடைய குட்டித் தீவை எட்டிப்பார்த்த திருப்தியில் சுனாமியின் சோகங்களை மறந்து திரும்பிய மக்களுடன் தொலைந்துபோன தனது தனயன் கிடைப் பான் என்ற நம்பிக்கையில் கோயில் கோயி லாக ஏறி இறங்கும் ஒரு தாயின் கண்ணீரை யும் கச்சதீவில் காணமுடிந்தது. *

# மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## அரசு - புலிகள் இருதரப்புக்கும் சொல்ஹெய்ம் அழைப்பு

கொழும்பு,பெப்.26

அரசும், புலிகளும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இதுவே சமாதானத்திற்கான சிறப்பான பின்னணியையும் தோற்றுவிக்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நோர்வேயின் சமாதானத்துக்கான விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், நிதி அமைச்சர் அமுனுகமவையும் தனித்தனியே அவர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் இப்போது தற்கொலைத் தாக்குதல் இடம்பெறுவதில்லை. முன்னர் கொழும்பு முழுவதும் சோதனைச் சாவடிகளே இருந்தன. இப்போது அவை அகற்றப்பட்டுள்ளன. மக்கள் நம்பிக்கையோடு நடமாடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்வில் மாற்றத்திற்கான தொடக்கத்தைக் காணலாம். சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் மக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனித்து வருகிறார்கள்.

இவை எல்லாம் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னர் ஏற்பட்டவையே.

அவ்வாறான உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்று வருடங்கள் முடிந்துள்ளன. இதனால், மனிதப் படுகொலைகள் பெரும் அளவில் குறைந்துள்ளன.

எனவே, இதுவரை கட்டிக்காத்துவந்துள்ள இந்த நிலைமையை மேலும் விருத்திசெய்ய வேண்டும். அதற்கு இருதரப்பும் - புலிகளும் அரசும் - மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பின்பற்றுவதில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

அப்படிச் செய்தால்தான் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான செம்மையான சூழலை உருவாக்க முடியும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதான விசேட தூதர் எரிக் சொல்ஹெய்முடன் கொழும்புக்கான நோர்வேத் தூதர் பிரஸ்கரும் இணைந்து அமைச்சரையும், பிரதமரையும் சந்தித்தனர். (க-8)

# வேலணையில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.26

வேலணை பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை உதவிப் பிரதேச செயலர் முரந்த கோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினராக யாழ்மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமாரும் கலந்துகொள்வர். (3-202)

# குடும்பத்தைப் பிரிக்கத் துணைபோகும் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எதிர்ப்பு

குடும்பத்தைப் பிரித்து வைப்பதற்குத் துணைபோகும் இந்தச் சட்டமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. எமது கலாசாரத்துக்கு இது ஒரு போதும் ஒத்துவராது என்கிறார் ஆளும் கட்சியின பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

ஆளுங்கட்சி கொண்டுவந்த வீட்டு வன்முறைச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதில் தனக்கும் ஆட்சேபனை உள்ளது என்றும், ஆளும் கட்சிக்குள்ளும் பலருக்கு இந்தச் சட்டமூலம் தொடர்பாக முரண்பாடான கருத்து நிலவுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாயன்று வீட்டு வன்முறை தொடர்பான சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இப்படித் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

வெளிநாடுகளில் கணவன், மனைவி பிரிந்து செல்வது என்பது சர்வ சாதாரணமான ஒரு விடயம். சட்டமும் அதை இலகுவாக்கியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை எமது கலாசாரம் அதற்கு ஒரு போதும் இடங்கொடுக்காது. குடும்பத்தைப் பிரித்துச் சீரழிக்கும் ஒரு சட்டம் எமக்குத் தேவைதானா? என்று கேள்வி எழும்புகிறது.

கணவனையும், மனைவியையும் பிரிக்க சட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவந்தால் அவர்களின் பிள்ளைகளின் நிலை என்னவாகும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். குடும்பத்தைப் பிரிப்பதா அல்லது வாழவைப்பதா? என்ற தீர்மானத்துக்கு நாம் வரவேண்டும்.

இந்தச்சட்ட மூலம் மூன்றாவது முறையாக நாடாளுமன்றுக்கு வந்துள்ளது. இதை நிறைவேற்றுவதா? இல்லையா? என்பது பற்றி அனைத்துத் தரப்பினருடனும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்த பின்னரே இதனை நடைமுறைப் படுத்துவது குறித்துச் சிந்திக்க வேண்டும் - என்றார் அவர். (எ-க)

# கல்வி அமைச்சின் ஆலோசனைக்குழு திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம்

திருகோணமலை,பெப்.25

கல்வி அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவைச் சேர்ந்த 4 பேர் அடங்கிய குழு ஒன்று கடந்த திங்களன்று திருகோணமலைக்கு விஜயம் செய்தது.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.டபிள்யூ. விஜேசிறி தலைமையில் வருகைதந்த இக் குழுவினர் மூதூர், கிண்ணியா, திருகோணமலை ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று பாடசாலைகளில் எவ்வாறு உளநல சேவைகளை வழங்கலாமென ஆய்வுசெய்தனர்.

மாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை, உளவளத்துணை ஆசிரியர் அரிதரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எல்.ஏ.ஜவாத் இன்னும் பலரும் இவர்களுடன் இணைந்துகொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு பாடசாலைகளில் உளவளசேவைகளை மேற்கொளவது குறித்து விசேட உளவள மருத்துவ விசேட நிபுணர் டாக்டர் கணேசனுடனும் இவர்கள் கலந்துரையாடினார்கள்.

இரு தசாப்த யுத்தம், ஆழிப்பேரலை அனர்த்தம் ஆகியவற்றால் இன்னலுற்றுள்ள மாணவர், ஆசிரியர், கல்வியாளர்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்குப் பரிகாரமாக எவ்வாறான உளநல சேவைகளை வழங்குவது என்பது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் 560 வழிகாட்டல் ஆலோசனை வள நிலையங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஏப்ரல் மாதத்தில் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-3)

# மாணவர் மன்ற ஒன்று கூடல்

கரவெட்டி,பெப்.26

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடலும் மதியபோசன விருந்தும் இன்று சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மன்றத் தலைவர் பொ.ஸ்ரீராமன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாகப் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் செ.தயானந்தா, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர். (3-73-202)

# கூட்டங்கள்

தென்மராட்சி,பெப்.26

யாழமாவட்ட பதிவு, உதவி வைத்தியர் சங்க வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி, நல்லூர் வீதியிலமைந்துள்ள சுகாதார பிராந்திய பயிற்சி நிலையத்தில் சங்கத தலைவர் டாக்டர் வீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் யாழ். கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தறபோது இடமாற்றப்பட்டுள்ளது என சங்கத் தலைவர் தெரிவித்தார். (3-117-202)

❑❑❑

கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின பொதுக் கூட்டம் அடுத்த மாதம்24ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (3-202)


# கிளை பணிமனை பொறுப்பாளர் - வவுனியா

உதயன் - சுடர்ஒளி பத்திரிகை கிளை பணிமனைக்கு அடிப்படைத் தகைமைகளுடன் 5 வருடம் நிர்வாகம், கணக்கியல் (Administration, Accounts) துறையில் அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த, கிளைப் பணிமனையை சுயமாக நிர்வகிக்கக் கூடிய கிளை பணிமனைப் பொறுப்பாளர் தேவை.

10.03.2005இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

MASS MEDIA SYNDICATE (PVT) LTD.,
No.85,Jayantha Mallimarachi Mawatha,
Colombo - 14

(C-41171) (21-42-14)



# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 04 - 1961

உதிர்வு 09 - 03 - 2004



அமரர்

## மங்களேஸ்வரராணி செல்வநாயகம்

(ஆசிரியை, யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை - யாழ்.மாவட்ட சமாதான நீதிவான் - J.P)

திதி: திருதியை 26.02.2005

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
அன்பு என்னும் அரவணைப்பில்
அறிவு என்னும் ஆழ் கடலாய்
தீங்கு எதனையும் விரும்பாது
எல்லோருக்கும் வழி காட்டியாய் இருந்த
எங்கள்அன்புத் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொள்கின்றீரோ?
ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை நெஞ்சம் – அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(42449)(42-14)

கணவர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1936 - 07 - 13



மறைவு 2005 - 01 - 27

## அமரர் கதிரேசு தெய்வானை

பலகோடி வருடங்கள் வாழ்வாய் என்றிருக்க
பாதியிலே எம்மை விட்டுச் சென்றதேனம்மா?
ஆறைந்து நாளாகியும் அகவில்லை உன் நினைவு –இனி
ஆண்டு பல கடந்தாலும் எமக்குக் கிடைக்குமோ உன் பரிவு?

56/30, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (42454)(21-14-42)

உன் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 30

# பில்லியன்

# ஆயுட் காப்புறுதி

# நிதி!

எக் காலத்திலாவது இது வெல்லப்பட முடியுமா?

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

**எமது தலைமைத்துவம்**
**எக் காலத்திலும் வெல்லப்பட முடியாதது!**

# அரசு – புலிகள் மோதல் தவிர்ப்பைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதே வெற்றிக்கான ஒரே வழி

## நோர்வே மாநாட்டில் அமைச்சர் பீற்றர்சன்

ஒஸ்லோ,பெப்.26

மோதல் தவிர்ப்பை தொடர்ந்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கடைப்பிடிப்பதே வெற்றிக்கான ஒரே வழி எனத்தெரிவித்துள்ளார் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன்.

நேற்றுமுன்தினம் அவர் நோர்வேயில் ஆற்றிய உரையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். ஸ்கண்டிநேவிய நாடுகளின் சமாதானத்திற்கான பங்கும் பாத்திரமும் குறித்து நோர்வேயில் அவர் ஆற்றிய உரையில் சர்வதேச ரீதியில் நோர்வேயின் சமாதானத்துக்கான பாத்திரத்தை விலாவாரியாகத் தெரிவித்தார். அவரின் உரையில் இலங்கை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசுத் தரப்பினரும், விடுதலைப் புலிகளும் 2002 இல் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இப்போது அவ் உடன்படிக்கை மூன்று வருடங்களைத் தாண்டியுள்ளது. 1983இல் உக்கிரம் அடைந்த யுத்த வரலாற்றில் இந்த மூன்று வருட மோதல் தவிர்ப்பு நீண்டதொரு காலப்பகுதிதான். இதனால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை கடைப்பிடிப்பதே வெற்றிக்கான ஒரேவழி. உடன்படிக்கையைக் கண்காணிக்க சுயேட்சையான கண்காணிப்புக்குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு நோர்வே தலைமை வகிக்கிறது. ஐந்து ஸ்கண்டிநேவிய நாட்டு அவதானிகளும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கண்காணிப்புக் குழுவில் டென்மார்க் முக்கிய நாடு. முழுமூச்சாகவும் அது தொழிற்பட்டுவருகிறது. பிரச்சினை வெடிப்பதற்கு முன்னரே சம்மந்தப்பட்ட இருதரப்பினருக்கும் உதவி, பிரச்சினையைத் தீர்க்கும் அனுசரணைப் பணியையும் கண்காணிப்புக் குழு மேற்கொண்டு வருகிறது. தற்சமயம், இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப்பேச்சு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அரசியல், பாதுகாப்பு நிலைவரம், பேச்சுக்கான சமபங்காளிகள் என்ற வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கான சம்மந்தப்பட்டவர்களின் தேவை என்பனவே பேச்சை மீள ஆரம்பிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன.

நாம் இருதரப்பினருடனும் தொடர்ந்தும் மிக நெருக்கமாகப் பணியாற்ற தயாராகவே உள்ளோம். சம்மந்தப்பட்டவர்கள் பேச்சு மேசைக்கு திரும்புவதற்கான அனுசரணையை நாம் வழங்குவோம். இந்தச் செயற்பாட்டில் தொடர்பாடல் வாசலை திறந்தவாறு வைப்பதே மிக முக்கியமானதாகும்.

இலங்கையில் சம்மந்தப்பட்டவர்கள் பேச்சை ஆரம்பிக்குமாறு எம்மைக் கேட்கவிரும்பும் வரை நாம் பொறுமைகாத்து அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைக் காக்க வேண்டியதும், பேச்சை முன்நோக்கி நகர்த்துவதற்கான பொறுப்பும் அவர்களையே சாரும் . எனத் தெரிவித்துள்ளார். (க-8)

## மாவட்டக் கல்வி மேம்பாட்டு பேரவைக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் அதன் தலைவராக செல்வி தி.பெரியதம்பியும், செயலாளராக அ.மு.அருணாச்சலமும், உபதலைவராக ப.விக்கினேஸ்வரனும், உபசெயலாளராக ஆ.சி.நடராசாவும், பொருளாளராக வே.ஞானகாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 14 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கல்விசார் நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கென பிரிவு ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் விவரம் வருமாறு:-

மாணவர் கல்வி மேம்பாட்டுக்குழு பொ. அருணகிரிநாதர், தமிழ்மொழி கலைத்திறன் விருத்திக்குழு - ச.கைலாசநாதன், விளையாட்டு மேம்பாட்டுக்குழு - சு.புண்ணியசீலன், தொழிற்கல்வி மேம்பாட்டுக்குழு - க.கனகராஜா, நிதிக்குழு - வே.ஞானகாந்தன். (8-13)

## வங்கி ஊழியர்களின் ஓய்வூதியம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய உரிமைகளைப் பெறுவதற்கான அமைப்பின் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ். கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுபாசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கை வங்கியைச் சேர்ந்த புஷ்பக ரணசிங்க மற்றும் சங்க அங்கத்தவர்களின் கருத்துரைகளும் இடம்பெறும். (3-202)

# அம்பாறை மாவட்ட மீனவர்கள் கல்முனை நகரில் ஆர்ப்பாட்டம்

கல்முனை,பெப்.26

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேச மீனவர்கள் நேற்றுமுன்தினம் கல்முனை நகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அப்பிரதேசத்தைச்சேர்ந்த பலநூற்றுக்கணக்கான மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவக்குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசும், அதிகாரிகளும் கருத்திலெடுக்காமையை ஆட்சேபித்தும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு இதுவரை உரிய நிவாரண உதவிகளை அரசு வழங்காமல் உள்ளதைக் கண்டித்தும் - மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட மீனவர் பேரவையின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மருதமுனையில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் கல்முனை -மட்டக்களப்பு நெடுஞ்சாலையூடாக கல்முனை நோக்கிச்சென்றது. இதனால் நெடுஞ்சாலையில் பலமணிநேரம் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

ஆயிரக்கணக்கான மீனவர்களும், அவர்களது உறவினர்களும் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர். சுலோக அட்டைகளை தாங்கியவாறு உரத்தகுரலில் கோசங்களை எழுப்பியபடி அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

'அரசே மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கு', 'சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதில் பாரபட்சம் காட்டாதே!', 'பராமரிப்பு செய்யாத அதிகாரிகளை வெளியேற்று!', 'மீனவ அமைச்சரே நிவாரணம் வழங்குவதில் இனவாதப்போக்கை கடைப்பிடிக்காதீர்!' போன்ற சுலோகங்களை ஊர்வலத்தில் சென்றோர் தாங்கியிருந்தனர்.

இந்த ஊர்வலத்தில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மீனவக்குடும்பங்களை சேர்ந்த அனைவரும் இணைந்து பங்கேற்றிருந்தனர். இவ்வூர்வலத்தையொட்டி கல்முனைப் பொலீஸார் பாதுகாப்பை பலப்படுத்தி இருந்தனர்.

வெளிநாடுகளிலிருந்து மீனவர்களுக்காக வழங்கப்பட்ட உதவிகள், நன்கொடைகள் தொடர்பான கணக்குகளை அரசு உடனடியாக வெளியிட வேண்டும்எனவும் இச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு முகாமை செய்யப்படவேண்டும் எனவும் ஊர்வலத்தில் சென்ற நபர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம் மீனவர்களுடன் பெண்களும் கலந்துகொண்டனர். வர்த்தக, வியாபார நடவடிக்கைகளுக்கும் இடைஞ்சல் எவையுமின்றி மிகவும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. (க-8)

### 1990 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து

# வடக்கில் மீளக்குடியமர விரும்பும் முஸ்லிம்களை அரவணைப்பது புலிகளின் கையிலேயே உள்ளது

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறுகிறார்

புத்தளம்,பெப்.26

1990 ஆம் ஆண்டின் இடம்பெயர்வையடுத்து மீண்டும் வடக்கில் மீளக்குடியமர ஆர்வம் கொண்டுள்ள முஸ்லிம்களை அரவணைப்பது விடுதலைப் புலிகளின் கையிலேயே தங்கியுள்ளது.

- இவ்வாறு புனர்வாழ்வு, வன்னிமாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். இவ்விடயம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தாம் பேசவுள்ளார் எனவும் அவர் கூறினார்.

கல்பிட்டி பிரதேச செயலர் பிரிவில் குருசிகரம்ப கிராமத்தில் நடைபெற்ற வைபவங்களில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் மிகவும் அந்நியோன்னியமாக வாழ்ந்தவர்கள். இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் தாயகத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக அகதிமுகாம்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்பரிதாப வாழ்க்கையை எமது மக்கள் வாழ்வார்கள்? இதற்கொரு முற்றுப்புள்ளி வைத்து புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய தேவை யேற்பட்டுள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் எஸ்.ஹமீது, பிரதிப்பணிப்பாளர் பதுருதீன், கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சின் இணைப்பாளர் உதுமாலெப்பை, அமைச்சின் ஆலோசகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.என்.அய்யூப் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (க-8)



வரணி இடைக்குறிச்சியில் நியாப் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை மேற்படி திட்ட மாவட்ட இணைப்பாளர் எஸ். பாலகிருஸ்ணன் நாடா வெட்டித்திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலன் மற்றும் இடைக்குறிச்சி மாதர் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் செல்வி அ.கிரிஜா ஆகியோர் காணப்படுகின்றனர்.
(படம்: வரணிச் செய்தியாளர்)

# தனியார் பல்கலை. அமைக்கும் திட்டம் மானிய ஆணைக்குழுவுக்கு இல்லை

## அடித்துக் கூறுகிறார் அதன் தலைவர்

கொழும்பு,பெப்.26

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு இல்லை என்று அடித்துக் கூறுகிறார் அதன் தலைவர்.

தனியார் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பாக வெளிவரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சினாலோ அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினாலோ தனியார் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் மேலும் தெரியவருகிறது.

இதேவேளை, கல்விக்கொள்கை தொடர்பாகவும், தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எதிராகவும் ஜே.வி.பி. அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பேச்சு எதிர்வரும் 28ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும், இதில் கல்விப் பிரச்சினை தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

# குடும்பப்பிரச்சினைகள் தீர வேண்டுமானால் வீடிழந்தோருக்குத் தனித்தனி வீடுகள் தேவை

கொழும்பு,பெப்.26

குடும்பப் பிரச்சினைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டுமானால் முதலில் வீடுகளை இழந்தவர்களுக்குத் தனித்தனியாக வீடுகள் அமைத்துக கொடுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாயன்று வீட்டு வன்முறை தொடர்பான, சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி. நிஜாமுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

அரசு கொண்டுவரவுள்ள இந்தச் சட்டமூலம் ஒவ்வொரு ஆண்மகனையும் பொலீஸ் நிலையத்துக்கு அலைக்களிக்கும் ஒரு செயலாகும். இது எமது நாட்டுக்கு அவசியமற்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கிப் படுமோசமான ஒரு வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு இந்தச் சட்ட மூலம் தேவையற்ற ஒன்று. முதலில் அவர்களின் மன உளைச்சலுக்கும், இழந்த உடைமைகளுக்கும் தீர்வு கிடைக்கவேண்டும்.

சொத்துக்களை இழந்து அகதிகளாகியுள்ள மக்களுக்கு மலைநாட்டிலுள்ள லயன்களைப் போன்ற வீடுகள்அமைக்கப்பட்டு, ஒரு சிறிய அறைக்குள் 7 முதல் எட்டுப் பேர்வரை தங்க வைக்கப்பட்டுள்ளனர். இது போன்ற செயல் குடும்பப் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

வடக்கு - கிழக்கில் ஆரோக்கியமான ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் எந்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாது - என்றார்அவர்.(எ-க)

# நீத்தார் நயப்புரை

## நேர்மைத்திறன் மிக்கவர்



கடல் தன் இருப்பை நிலைநிறுத்துவதற்கான, மீள்சமப்படுத்தலின் போது பல உயிர்களை "சுனாமி" வடிவில் காவுகொண்டது. மக்கள் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் திரு.பராபரனும், அவர் குடும்பமும் இதில் அடங்கும்.

திரு.பராபரன் இயற்கை வனப்பு மிக்க புத்தூரிலே, சைவப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் 1950 இல் பிறந்தார்.

யாழ்.மத்தியகல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பன இவருக்கு உயர்கல்வி ஊட்டியது, 1972 இல் வங்கிச் சேவையில் இணைந்தார். கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மக்கள்வங்கிகளில் முகாமையாளராக நற்பணிபுரிந்து பாராட்டுக்கள் பெற்றார். இலக்கிற்கு அதிக இலாபம் பெற்றுக்கொடுத்தார். ஒழுக்கமாய் வாழ்வதில் குறியாக இருந்த பராபரன் அபரிமிதமான தன்னம்பிக்கையுடனும விடாமுயற்சியுடனும் வாழ்ந்து முன்னுக்கு வந்தவர்.

சேவைக்காலத்தின் போது கணக்கியல், முகாமைத்துவப் பட்டப்படிப்புக்களில் தேறி துறைசார் புலமையிலும் சிறந்து பலரும் மதிக்க வாழ்ந்தார். பண்பிலும் நேர்மையிலும் மனிதநேயத்திலும் பராவை விஞ்சியவர் இல்லை எனலாம். வங்கி உயர் அதிகாரிகளின் கருத்திலும் பல்லின மக்கள் மத்தியிலும நல்லுறவை வளர்த்தவர், எல்லோரையும் சமமாகவே மதித்தவர், நேர்மைத்திறன் நிறையவே இருந்ததால், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத் தன்மையிருந்தது.

மன அழுத்தங்களை வென்றிடவும் மூப்படைவதை தவிர்க்கவும், 'யோகாசனம்' பயின்றார். தன் ஒவ்வாரு பிறந்தநாளையும் அனாதைச் சிறுவர்களுடனேயே கொண்டாடினார். காருண்ய கொடைகளும் வழங்கினார். ஆங்கிலக் கல்வியில் திறமையுள்ள, வசதியற்ற பிள்ளைகள் பலருக்கு அவ்வப்போது நிதியுதவி வழங்கி ஊக்குவித்தார். தெஹிவல இந்து, வவுனியா தமிழ்ப் பாடசாலைப் பிள்ளைகள், யாழ்.தனியார் கல்வி நிறுவனப் பிள்ளைகளெனப் பலர் பயனடைந்தனர். தன்னார்வத் தொண்டாகத் தன் செலவில் இளைஞர்களை ஒழுங்கு செய்வித்து களுபோவில, வவுனியா, போன்ற வைத்தியசாலைகளில் இரத்ததானம் செய்வித்தார். பலருக்கு சுய தொழில் கடன்பெறும் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தார். வேறுவழியின்றி வீட்டை விற்று தமது பெருங்கடனைக் கட்ட முற்பட்ட கடனாளிகளுக்குத் தன் சொந்தப் பணம்கொடுத்து பல தவணைகளில் கடனைக் கட்டுவித்தார். எதையும் புகழ்விரும்பிச் செய்தவர் அல்ல.

1983 இல் இன வன்முறைச் சுனாமியிலிருந்து உயிர்தப்பினார். சிங்களவருக்கு வங்கிச் சேவையின்போது இவர் செய்த உதவி இவரின் உயிரைக் காப்பாற்றியது. இருந்த போதும் அடித்து விரட்டப்பட்டு தாய்மண்ணில் தஞ்சமடைந்திருந்தார். தன்மான உணர்வு இவரின் நரம்போடு பின்னியிருந்தது. ஆணவத்திற்கு சாமரம் வீசியவரல்ல காளான்களுக்கு குடைபிடித்துக் கை சரித்தவரும் அல்ல அன்பிற்கு தலைவணங்கியவர்.

கொழும்பிலே வாழ்ந்தவர், இயற்கைச் சுனாமியின் பின் எமது இதயத்திலே வாழ்கிறார்.

**சி.குணரத்தினம்**
**-புத்தூர்-**

## சைவப் பாரம்பரியத்தில் வந்த சான்றோன்



மட்டுவில் வடக்கில் வாழ்ந்த காசிநாதர் என்பவர் 1884 ஆம் ஆண்டு தனது காணியில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலையைக் கட்டினார். ஆரம்பத்தில் அப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்கள். உரையாசிரியர் சிறிது காலத்தின் பின் சிதம்பரத்திலுள்ள நாவலர் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராகச் சென்றார். காசிநாதர் காலமானார். பாடசாலையை நடத்துவதற்கு எவருமே முன்வரவில்லை.

பாடசாலைக் கட்டிடத்தின் பின் உரித்தாளரிடமிருந்து அதைப் பெற்றுக்கொண்ட மிசனரிமார் அதில் அரசாங்க உதவிபெறும் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து நடத்திவந்தனர்.

1923 மார்கழியில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1924 இல் லோச் செல்லப்பா என வழங்கும் நா.செல்லப்பா தமது சாதுரியத்தால் மிசனரிமாரின் நிர்வாகத்திலிருந்து பாடசாலையை மீட்டெடுத்து, சந்திரமௌலீச வித்தியாசாலை என்ற பெயரில் அதன் நிர்வாகத்தைச் சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளித்தார். இது பற்றிய விவரங்களைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய மறைகின்ற பழைய நினைவு என்னும் கட்டுரையில் காணலாம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராக இருந்தவர் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் இவர் ம.க.வேயின் மனைவியின் சகோதரர் அக்காலத்தில் மட்டுவிலிலிருந்து சுழிபுரத்துக்குச்சென்று விக்ரோரியா கல்லூரியில் கற்றவர்களில் திருவாளர்கள் பொ.தாமோதரம்பிள்ளை, வ.வேலுப்பிள்ளை, க.காசிநாதர் என்னும் மூவரும் முக்கியமானவர்கள். மட்டுவிலைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், சைவப் பெரியார் இவர்கள் மீது விசேட கவனம் செலுத்தினர். இவர்கள் நெறிபிறழாத சைவசமயிகளாக இறுதிவரை வாழ்ந்து சமயப் பணிபுரிந்தனர்.

உடன் பிறவாச் சகோதரராகிய இவர்களில் பொ.தாமோதரம்பிள்ளை மலேசியாவுககுச சென்று அரசசேவை செய்தவர். இவரால் கட்டப்பட்டதே மட்டுவில் மகா முத்துமாரி அம்பாள் ஆலயம்.

பன்றித்தலைச்சி கண்ணகி அம்மை கோயிலின் தெற்குப் பக்கத்தில் வீதியோரத்திலிருக்கும் மடத்தைக் கட்டியவர் வ.வேலுப்பிள்ளை.

2005.01.22 இல் சிவகதியடைந்த காசிநாதர் சந்திரமௌலீச வித்தியாசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அப்போது ஒரு பரப்புக் காணி மாத்திரமே பாடசாலைக்குரியதாயிருந்தது. 1961 இல் இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றபோது ஆரம்பத்தில் பாடசாலைக்குரியதாயிருந்த காணியில் ஒரு பரப்புக்காணியைத் தவிர்ந்த மிகுதிக் காணி முழுவதும் ஆசிரியர் காசிநாதர் அவர்கள் பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுககப்பட்டதேயாகும். இது இவர் செய்த வித்தியா தருமம் - சமயப்பணி.

நான் சந்திரமௌலீச வித்தியாசாலையில் மூன்றாண்டுகள் மாத்திரமே கல்விகற்றேன். அக்காலத்தில் இவர் எனது ஆசிரியராக இருந்தார். அதனால், எனது உறவினராக இருந்தபோதிலும் நான் இவரை 'உபாத்தியார்' என்றழைப்பதே வழக்கம்.

இவர் என்னைப் பலமுறை அச்சுவேலிக் குமாரசாமிக் குருக்களிடம் அழைத்துச் சென்றார். ஒருநாள் குமாரசாமிக் குருக்கள் தாம் எழுதிய முப்பொருள் விளக்கம் என்னும் நூலை எனக்கு அன்பளிப்புச் செய்தார். அந்நூலும் குருக்களுடைய தொடர்பும் எனக்குச் சைவசிந்தாந்த அடிப்படை உண்மைகளை விளங்கிக் கொள்வதற்குப் பேருதவி புரிந்தன.

இவ்வாறு சைவப் பாரம்பரியத்தில் வந்து, சைவப் பாடசாலையின் வளர்ச்சிக்குதவிய உபாத்தியாரின் வழித் தோன்றல்களும் சைவப் பணிபுரிவது மகிழ்ச்சிக்குரியது.

இவருடைய ஆன்மா பேரின்பப் பெருவாழ்வு பெறவேண்டுமெனச் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசப் பெருமானை வேண்டுகின்றேன்.

**மட்டுவில். ஆ.நடராசா**

# நூல்வரிசை



**நூல்: கூலிக்கு வந்தவன் (நாவல்)**
**ஆசிரியர்: ச.வே.பஞ்சாட்சரம்**
**வெளியீடு: நூல் இலக்கிய வட்டம்**

கூலிக்கு வந்தவன் என்ற நாவல் இக்கால இளைஞர்கள், யுவதிகள் மட்டுமல்ல எலலோருமே படித்துச் சுவைக்க வேண்டியதொன்று. படிப்பவர் உள்ளத்தை வேறு இடங்களில் அலையவிடாது புத்தகத்தினுள் பொதிந்து கிடக்கக் கூடியவாறு திறனாக ஆககியுள்ளார் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் சமூகக் குறைபாடுகளைக் களையும் முறைகளை இந்நூலில் கூறியுள்ள விதம் வியப்பானது.

சரவணன் எதற்காக? எவ்வாறு? சாமியாராகினான் என்பதும், பூங்கொடி, பெருந்தகை என்பவர்கள் மூலம், அலையாக ஆர்ப்பரிக்கும் மனத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதும், இலவசக் கல்வி வாய்ப்பைக் கூடியமட்டில் பயன்படுத்திப் பெரிய சமூகத்தவருடனும் போட்டி போட்டுக்கொண்டு சிறுபான்மையினர் முன்னேற ஆயத்தமாக வேண்டும் எனறு கூறிய விதமும், வேலையற்ற, படித்த வாலிபர்களின் அவல நிலையும், உலகநாதபிள்ளை, பெருந்தகை இருவரும் ஆளுக்காள் வைத்திருந்த நம்பிக்கை போன்றவை பற்றியெல்லாம் நூலாசிரியர் சொல்லிய விதம் இவருடைய தமிழ் இலக்கிய ஆர்வத்தையும், இலக்கியப் பயிற்சியையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பண்டிதர் ஐயா அவர்கள் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் மரபையும் காக்கும் வகையில் பல நூல்களை ஆக்கவேண்டும் என்று வாழ்த்துவதோடு அதற்காக இறையருளையும் வேண்டி நிற்கின்றோம்.

**பொ.தயாளன்**
**(மாணவன்)**



**நூல்: தாயகம்**
**ஆசிரியர்: தணிகாசலம்**
**வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை**

தாயகம் கலை இலக்கிய விஞ்ஞான இதழின் 52 ஆவது மலர் வெளிவந்துள்ளது. நீண்ட காலமாக தொடரொழுங்குச் சமநிலையற்று மாத இதழாக வெளிவந்த இவ்விதழ் இப்போது ஒரு காலாண்டிதழாக தொடரொழுங்கில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய நாகரிகம் என்ற மகுட வாக்கியத்துடன் வெளிவரும் இவ்விதழில் சமூக பிரக்ஞையும் பொதுவுடமைச் சித்தாந்தத்தை வலியுறுத்தியும் உள்ள படைப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுனாமியின் கொடூரக்காட்சிகளை அட்டைப்படத்தில் பொறித்துள்ள தாயகத்தில் சுனாமி அனர்த்தமும் அதன் பின்விளைவுகளும் என்ற க.வேல்தஞ்சனின் கட்டுரை சுனாமியைப் பயன்படுத்தி அமெரிக்காவும் அதன் ஆதரவுச் சக்திகளும் விடுதலைப் போராட்டம் நடைபெறும் இலங்கையிலும் இந்தோனேசியாவிலும் நுழைந்துகொண்டவற்றை விளக்குகின்றது.

அத்துடன், சி.சிவசேகரம், புவியன், செந்திரு, மருத்துவர் புகழேந்தி, ஏ.ஆர்.வி.லோசன் ஆகியோரது கட்டுரைகளும் விமர்சனமும் மாவை வரோதயன், ஸ்ரீ, முத்து, நீ.பி.அருளானந்தம், கே.ஏ. சீவரத்தினம்(மொழிபெயர்ப்பு) ஆகியோரது சிறுகதைகளும் சோ.பத்மநாதன், புதுவை இரத்தினதுரை, முருகையன், ச.முருகானந்தன், த.ஜெயசீலன், தணிகையன், நீலன், காலையூரான், விருத்தன், எஸ்.ஜி.கணேசவேல், வெதமுல்லையூர், க.விநாயகமூர்த்தி , த.அஜந்தகுமார், ஸ்வப்னா ஆகியோரின் கவிதைகளும், குழந்தை ம.சண்முகலிங்கம் மொழிபெயர்த்த தாகூரின் கவிதைவரிகளும் தாயத்தில் உள்ளடங்கியுள்ளன. மறைந்த மூத்த படைப்பாளிகளான சொக்கன், தில்லைச்சிவன், புத்தொளி ஆகியோருக்கான அஞ்சலிக் குறிப்புக்களும் தாயகம் இதழில் வெளிவந்துள்ளன.

காத்திரமான கலை, இலக்கிய, சமூகவியல், அரசியல் சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தும் தாயகம் இதழ் அனைவரும் படிக்கவேண்டிய இதழாகும்.

**இயல்வாணன்.**



கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் அதி திறமைச் சித்திபெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சதானந்த சர்மா ரமணனுக்கு (மாவட்ட நிலை - 1 தேசிய நிலை - 7) ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி மாளிகையில் வைத்து பதக்கம் அணிவித்து பரிசில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (8)



கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது இம்முறை கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றபோது கலைப்பேரரசின் குடும்பத்தினர் சார்பில் அவரது மருமகனான பொறியலாளர் தயாபரன் விருதுக்கான சன்மானத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக் கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக் குச் செவ்வரத்தை, றோசாக்கன்றுகள், குறோட் டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச்சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (C/40623)

2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக் குண்டு. விரும்புவோர்: து.துஷிதரன், இல.12, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. (42361)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (SISILL60) விற்பனைக்குண்டு. தொடர்பு: 219/1, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் (7ஆம் நாள் சேச்சுக்கு முன்னால்). (42432)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் இந்துக்கல்லூரியின் சுற்று வட்டத்தில் டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய தென்னை வளமுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.கமல நாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத் தானை, சாவகச்சேரி. T.P.: 0777 - 676593, 0776 - 745858. (சி-41095)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற் பனைக்குண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: ந.கணேஸ்வரன், இல.17, நாவலடி லேன், பேச்சியம்மன் கோயிலடி வண். வட மேற்கு, யாழ்ப்பாணம். (42450)

Prima உயிர் Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42468)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்ப னைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். 1kg - 200/= சுத்தம் செய்யப் பட்டது. 1kg - 320/= தொடர்பு: சிவா, இராம லிங்கம் வீதி, முடமாவடி (42472)

### பணிப்பெண் தேவை

நோய்வாய்ப்பட்டுள்ள வயோதிபப் பெண் ஒருவரை தங்கியிருந்து பராமரிப்பதற்கு அனு பவமுள்ள பெண் தேவை. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (42459)

### தவறிவிட்டது

அம்மன் கோயிலடி, கோண்டாவிலைச் சேர்ந்த லோகநாதன் றோஜீ என்பவரது தேசிய அடையாள அட்டை (846492585V) கல்வியங்காட்டுக்கும் திருநெல்வேலிக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். அம்மன் கோயிலடி, கோண்டாவில் T.P.: 021 - 5807. (42461)

சின்னராஜா கோமதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (797311936V) யாழ்ப் பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P.: 021 226 3317, Mobile 0777 079764 (42439)

### மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாட கைக்கு இருபாலாருக்கும் வழங்கப்படும். தொடாபு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 0777 593722 (42296)

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தில் 1975இல் பிறந்த பூரட்டாதி 3ஆம் பாதம் செவ்வாய்க் குற்றம் இல்லாத கிரகபாவம் 30¾ U.K நிரந்தரப் பிரஜையான மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. மணமகன் இந்தி யாவுக்கு வந்து திருமணம் செய்து அழைத்துச செல்வார். தொடர்பு: சிவா திருமண சேவை, கொடிகாம றோட், துன்னாலை தெற்கு, கரவெட்டி. T.P.: 077 6243114 (42473)

கௌரவமான குடும்பத்தில் 1973இல் பிறந்த திருவாதிரை 4ஆம் பாதம் 7இல் செவ்வாய் கிரகபாவம் 53 U.K. நிரந்தரப் பிரஜையான மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. மணமகன் இங்கு வந்து திருமணம் செய்து அழைத்துச் செல்வார். தொடர்பு: சிவா திருமண சேவை, கொடிகாம றோட், துன் னாலை தெற்கு, கரவெட்டி. T.P.: 077 6243114 (42474)

கௌரவமான குடும்பத்தில் 1978இல் பிறந்த அவிட்டம் 4ஆம் பாதம் செவ்வாய்க்குற்றம் இல்லாத கிரகபாவம் 40¾ ஆஸ்திரேலியா நிரந்தரப் பிரஜையான மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. மணமகன் இங்கு வந்து திருமணம் செய்து அழைத்துச் செல்வார். தொடர்பு: சிவா திருமண சேவை, கொடிகாம றோட், துன்னாலை தெற்கு, கரவெட்டி. T.P.: 077 6243114 (42476)

### மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1979இல் பிறந்த உத்தராடம் முதலாம் பாதம் B.Sc., Com. Seien படித்த, அழகான மண மகளுக்கு கனடா, லண்டன், ஜேர்மனி, சுவிஸ ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மண மகன் தேவை தொடர்பு: சிவா திருமண சேவை, கொடிகாம றோட், துன்னாலை தெற்கு, கரவெட்டி. T.P.: 077 6243114 (42465)

## கோண்டாவில் பாடசாலையில் தரம் பத்து நடத்த அனுமதி

வலி.தெற்கு,பெப்.26

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத் தில் இவ்வருடம் தொடக்கம் பத்தாம் தரம் வரை வகுப்புகள் நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக வித்தியாலய அதி பர் எஸ்.சண்முககுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம்வரை இவ்வித்தியாலயத் தில் ஒன்பதாம் தரம் வரையே வகுப்புகள் நடைபெற்று வந்துள்ளன. ஜீ.சி.ஈ. சாதாரண தரம்வரை வகுப்புகளை நடத்தி வித்தியாலயத் தின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கு மாறு, வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவர் சங்கம், பெற்றோர் கள், பொதுமக்கள் பலரும் கல்வி அமைச்சி டம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பாடசாலையைத் தரம் உயர்த்தும் நோக் குடன் இவ்வருடம் முதல் பத்தாம் தரத்தை ஆரம்பிப்பதற்குக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பாடசாலையில் மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு வேண்டிய தளபாடங்கள், இட வசதி போன்றன பற்றாக்குறையாக இருப்ப தாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.(எ-152)


நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் சமூகசேவை அர்ப்பணிப்பு நிதிக்கான

CELEBRATE ROTARY 100 Years

# கலைகளின் சங்கமம்

✣ அருணா இசைக்குழுவின் அற்புத ராகங்கள்
✣ இசை நடன நிகழ்ச்சிகள்

இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்

காலம்: 27.02.2005 (நாளை)

நேரம்: பி.ப.3.00 மணி (இ.நே)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Rtr.M.நிசாந்தன். (திட்ட இயக்குனர்) நல்லூர் றோட்டறக்ட் கழகம். (சி-41183)(21-42-16)



### புறோயிலர் கோழி விற்பனைக்கு

சுத்தம் செய்த புறோயிலர் கோழி 1Kg - 300/-
சுத்தம் செய்யப்படாத கோழி 1Kg - 200/- வியாபாரி களுக்கு விசேட கழிவுண்டு

P.K.T பாம்

அம்மன் கோயிலடி சங்கரத்தை வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

(42482) T.P.: 077-3146048 (46-21-15)



### விற்பனைக்கு

Radio Aiwa Jappan Compact Disc sterio Cassette Receiver விற்பனைக்குண்டு.

தொடர்பு: நடேசன்

மே/பா.விக்ரம் அன் சன் பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை.

(42466)(42-21-16)


## கீரிமலைக் கடலில் நீராட அனுமதி

கீரிமலை ஸ்ரீ நகு லேஸ்வரர் ஆலயத்தில நடைபெற்று வரும் பெருந்திருவிழாவை முன்னிட்டு கீரிமலைக்கு வருகைதரும அடிய வர்கள் கடலில் நீரா டுவதற்கு கடற்படை யினரும், இராணுவத் தினரும் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடற்கரையிலிருந்து நூறு மீற்றர் தூரம் வரையான கடற்பகுதி யில் நீராட இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

அத்துடன், தெல் லிப்பழை மற்றும் சேந தான்குளம் பாதை யூடாகக் கீரிமலை செல லும் பக்தர்கள் இரா ணுவச் சோதனைச் சாவடிகளில் தமது அடையாள அட்டை களை சமர்ப்பித்து தமது சொந்த வாக னங்களிலும், சைக் கிள்களிலும் செல்வ தற்கும் இராணுவத் தினர் அனுமதி வழங் கியுள்ளனர். (எ-152)

## கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழா

கரவெட்டி,பெப்.26

வடஅல்வை முரு கேசனாரின் 'பன்முகப் பார்வை' என்னும் கட்டு ரைத் தொகுப்பு வெளி யீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆனந்தகானம், ஆவ ரங்கால், புத்தூர் என் னும் இடத்தில் நடை பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரி யர் புத்தூர் வே.இளைய குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுகவு ரையை மு.அநாதரட் சகனும், வெளியீட்டு ரையைத் தெணியா னும், மதிப்பீட்டுரை களை யாழ்.பல்க லைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவ லிங்கராஜா, முன்னாள கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆகி யோரும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து சிறப் புரைகளை நாடாளு மன்ற உறுப்பினர்கள் மா.க.ஈழவேந்தன், கி. சிவனேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற் றும் சி.கிருஷ்ண பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர். (3-70-202)

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.போதனா வைத்தியசாலை வளா கத்தில் சிறிய தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள் ளது.

உரியவர்கள் வைத்தியசாலை நிர் வாகத்துடன் தொடர்பு கொண்டு அதனை ஆதாரம் காட்டிப் பெற றுக்கொள்ளுமாறு வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (10-13)


வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும்

### சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 158ஆவது ஆராதனை விழா - 2005

இடம் : யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
காலம் : 27.02.2005
நேரம் : காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை

மேற்படி சபை அங்கத்தவர்கள், இசை ரசிகர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.ப.விக்னேஸ்வரன் தலைவர். (சி-41187) (24-21-16) திரு.அ.தற்பரானந்தன் செயலாளர்.



உ

### அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

தலைவர்: திரு.தி.கிருஷ்ணகுமார் (மேற்படி சங்கத் தலைவர்)
இடம்: திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் கோயில் சனசமூக நிலைய மண்டபம்
காலம்: 27.02.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி

விஸ்வகர்மகுல மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தி.கிருஷ்ணகுமார், தலைவர். த.பரராஜசிங்கம், செயலாளர்.

தபால் தொடர்பு: நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(42-21-16) (சி-41185)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 09 - 1921



மறைவு 09 - 03 - 2004

**அமரர் சோமசுந்தரம் நடராசா**

திதி: அபரபக்க திருதியை 26.03.2005

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீர்கள்
புனித வாழ்வு வாழ்ந்து புண்ணியர் கழல் சேர்ந்தீர்கள்
இனிய உமது முகத்தை எப்படி நாம் மறப்போம்?
ஆத்மா சாந்தியுற ஆண்டவனை வேண்டுகின்றோம்

இன்று (26.02.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

21/2 சீனியர் ஒழுங்கை கலட்டி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டிகள்.

(42465)(21-16)

### பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 05 - 12 - 1965



ஆண்டவன் அடியில் 26 - 02 - 1994

**செல்வன் நாகமுத்து சற்குணபாலா (அங்கு) (ஜேர்மனி)**

திதி:26-02-2005

பறந்து எம்மடி வருவீரென
பார்த்திருந்தேன் என் மகனே
பதில் தராது சென்றது ஏனோ? நானறியேன்
பதினோராண்டுகள் சென்றதையா
பகல் கனவாய் ஆனது உன் வாழ்வு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்: ஐயா, அம்மா, சகோதரர்கள், ஆசையக்கா, மைத்துனர், மைத்துனிமார், தம்பி பாலன் (லண்டன்), மாமன்மார், மாமிமார், உறவினர்கள்.

தகவல்: M.N.மகேந்திரன் (அண்ணன்) மாரியம்மன் லேன். திருநெல்வேலி. (42470)(21-16)

# வேலணை கல்விக்கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

வேலணை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம் - நயினாதீவு மகா வித்தியாலயம், இரண்டாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், மூன்றாவது இடம் - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், இரண்டாவது இடம் - வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி., மூன்றாவது இடம் - நயினாதீவு மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு (பெண்கள்)**

முதலாவது இடம் - வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி., இரண்டாவது இடம் - நயினாதீவு மகா வித்தியாலயம், மூன்றாவது இடம் - புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

**கிரிக்கெட்**

முதலாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், இரண்டாவது இடம் - நயினாதீவு மகா வித்தியாலயம், மூன்றாவது இடம் - வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.

**கரபந்தாட்டம் (15 வயதுப் பிரிவு)**

முதலாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், இரண்டாவது இடம் - வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.

**17 வயதுப் பிரிவு**

முதலாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், இரண்டாவது இடம் - வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.

**19 வயதுப் பிரிவு**

முதலாவது இடம் - நயினாதீவு கணேச வித்தியாலயம், இரண்டாவது இடம் - வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி., மூன்றாவது இடம் - அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம். (10-190)




அண்மையில் வடமராட்சிக்கு விஜயம் செய்த ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முகாமைத்துவக் குழுவின் தலைவருமான வி.மனிலால் பெர்னான்டோ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோது வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.வேதாபரணம் தங்கள் லீக் சார்பாக பனை உற்பத்திப் பொருள்களை வழங்கும்போது எடுக்கப்பட்ட படம். *(படம்:சி.சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்)*

# உதைபந்தாட்ட லீக் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,பெப்.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் விளையாட்டுத் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்திக் குழு மற்றும் தென்மராட்சி உதைபந்தாட்ட லீக் ஆகியவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற பிரதேச விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் இவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

இவற்றின் தலைவராக வை.அகிலனும், செயலாளராக வை.இராஜேஸ்வரனும், பொருளாளராக சி.உதயசேகரரும் மேலும் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன், தென்மராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ப.கெங்கன், பிரதேச விளையாட்டு அலுவலீர் எஸ்.சதஸ்குமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (10-117)

# விரைவாகச் சதம் அடித்தால் பற்குணராஜா வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம்,பெப்.26

பாடசாலை மட்டப்போட்டிகளில் 19 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட்டில் வேகமாகச் சதம் அடிக்கும் வீரருக்கு சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் பற்குணராஜா வெற்றிக்கிண்ணத்தைக் கடந்த 5 ஆண்டுகளாக வழங்கிவருகின்றது.

அதன் அடிப்படையில் இந்த வருடமும் அந்த விருது வழங்கப்படவுள்ளது. இப்போட்டிகளில் வீரர்கள் சதமடித்தால் அந்த விவரங்களை அனுப்பிவைக்குமாறு அக்கழகம் கோரியுள்ளது.

போட்டிக்கான புள்ளிவிவரத்தாள்களை (Score Sheet) போட்டி நடுவர்களுடன் அதிபர் அல்லது விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் உறுதிப்படுத்தி சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம், 223, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவவெற்றிக்கிண்ணத்தை 2000ஆம் ஆண்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் பானுஜெயன், 2001ஆம் ஆண்டு சென்.பற்றிக் கல்லூரி அணி வீரர் சோச்சில், 2002ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் லவேந்திரா, 2003ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி வீரர் மதூசன், 2004ஆம் ஆண்டு சென்ஜோன்ஸ் கல்லூரி வீரர் கிருஸ்ணகுமார் ஆகியோர் பெற்றுள்ளமை குறிப்பிட்டத்தக்கது. (10-190)

# கரபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு,பெப்.26

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கு இடையே இடம்பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுக் கோட்டமட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மகாஜனக் கல்லூரிக்கும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்திற்கும் இடையே இறுதியாட்டம் நடைபெற்றது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டித் தொடரில் முதல் நான்கு சுற்றுக்களிலும் இரண்டு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை இல்லையென்ற அடிப்படையில் விளையாடி ஒவ்வொரு சுற்றையும் மாறிமாறி வெற்றிகொண்டன.

இறுதியில் மகாஜனக் கல்லூரி ஐந்தாவது சுற்றின் வெற்றியைப் பலத்த பிரயத்தனத்தின் பின்னர் தனதாக்கியது. (10-135-152-190)

# கோட்டமட்ட கரபந்தாட்டப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்து அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.26

சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15,17,19 வயதுப் பிரிவு அணிகள் சம்பியனாகியுள்ளன.

15 வயதுப் பிரிவின் இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடியது இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

17 வயதுப் பிரிவிலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அணியே விளையாடியது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

19 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை அணி விளையாடியது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் 'கல்லூரி அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது.

(10-135-152-190)

## ஜே.வி.பியை தனது கூட்டில் வைத்திருந்தால்

# எத்தனை வருடங்கள் சென்றாலும் அரசால் பேச்சை ஆரம்பிக்க முடியாது

## ஐக்கிய தேசியக் கட்சி ஆரூடம்

கொழும்பு.பெப்.26

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் சமாதானப் பேச்சு இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போகின்றது. மூன்று வருடங்கள் அல்ல எத்தனை வருடங்கள் கடந்தாலும் நேரடிப் பேச்சு இனி இடம்பெறாது. அரசும் பெரும் சிக்கலில் மாட்டப்போகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது :-

சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரசு எந்தவொரு கருத்தை முன்வைத்தாலும் அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினர் அதனைக் கடுமையாக எதிர்க்கின்றனர். அரசை விட்டு விலகப்போகிறார்கள் எனவும், மக்களை வீதிக்கு இறக்கிப் போராட்டம் நடத்தப் போகிறார்கள் எனவும், அவர்கள் மிரட்டுகின்றனர். இப்படிப்பட்டதொரு நிலையில் யுத்தநிறுத்தம் செய்து மூன்று வருடங்கள் அல்ல எத்தனை வருடங்கள் சென்றாலும் அரசால் சமாதானப் பேச்சைத் தொடங்கமுடியாது.

பேச்சை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றால் அரசு தமது கூட்டுக்குள்ளே முதலில் ஓர் ஒற்றுமையை உருவாக்கவேண்டும். ஜே.வி.பியுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதைவிட்டுவிட்டு ஜே.வி.பியைத் திருப்திப்படுத்த ஒரு கருத்தும், மக்களைத் திருப்திப்படுத்த ஒரு கருத்தும் என அடிக்கடி அறிக்கை விட்டுக்கொண்டே இருந்தால் அரசால் பேச்சை நிச்சயம் தொடங்க முடியாது. இந்த நிலை மீண்டும் யுத்தத்திற்கே வழிசமைக்கும்.

இந்த நாட்டின் மீது அரசுக்கு உண்மையில் அக்கறை இருந்தால், புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் பற்றியல்ல சமாதானத்தின் அடிப்படை விடயங்கள் பற்றிக் கூடப் பேசக் கூடாது என்று சொல்கின்ற ஜே.வி.பியை அரசு ஆட்சியில் இருந்து நீக்கவேண்டும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் பேச்சுத் தொடங்கும் வகையில் அரசுக்குப் பூரண ஆதரவு வழங்க நாம் தயார், அதை விட்டுவிட்டு சிறு பிள்ளைகளுடன் சேர்ந்து ஆட்சி நடத்தினால் இந்த அரசு பெரும் சிக்கலில்தான் மாட்டிக் கொள்ளும் - என்றார். (க-8)

# ஊடகவியலாளர் விவரக்கொத்து சுற்றாடல் அமைப்பு வெளியிடும்

செங்கலடி,பெப்.26

நாட்டின் பிரதேச ஊடகவியலாளர் விவரக்கொத்து ஒன்றினை வெளியிடுவதற்கு இலங்கைச் சுற்றாடல் ஊடகவியலாளர் அமைப்பு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இலங்கை சுற்றாடல் ஊடகவியலாளர் சங்கம் இவ்வருடம் மார்ச் மாதத்தில் இவ்விவரக்கொத்தினை வெளியிடவுள்ளது. விவரக்கொத்தின் பதிப்புப் பணிகள் தற்போது முடிவடையும் தறுவாயிலுள்ளன.

நாட்டில் முதன்முறையாகப் பிரதேச ஊடகவியலாளர்களின் தகவல்களை உள்ளடக்கி வெளிவரும் விவரக்கொத்து இதுவேயாகும். ஏ-4 அளவிலான இவ்விவரக்கொத்து 309 பக்கங்கள் கொண்டதாகும் என இலங்கை சுற்றாடல் ஊடகவியலாளர் சங்கத்தின் இணைப்பாளர் தர்மவிக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பு கடந்த 17 வருடங்களில் சுற்றாடல் தொடர்பான 300 வெளியீடுகளை இதுவரை வெளியிட்டிருப்பதோடு, ஊடகவியலாளர்களுக்கான பல பயிற்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் 'குளோபல் - 500' என்னும் உலக சுற்றாடல் விருதை வென்றிருக்கும் இலங்கையிலுள்ள ஒரே அமையம் இதுவே ஆகும். இலங்கையிலுள்ள மூவாயிரத்து 218 பிரதேச ஊடகவியலாளர்களிடமிருந்து செயற்றிறனுள்ள இரண்டாயிரத்து 121 ஊடகவியலாளர்களது தரவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டின் ஊடகவியலாளர் விவரக்கொத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(க-3)

### சகோதரர்கள் சுட்டுக்கொலை

ராகமையில் சகோதரர்கள் இருவர் வீதியில் சென்றுகொண்டிருக்கையில் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கொலைசெய்யப்பட்ட சகோதரர்களுள் ஒருவர் மோட்டார் சைக்கிளிலும் மற்றவர் சைக்கிளிலும் சென்றுகொண்டிருக்கையில் இனம் தெரியாதோர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் கொலை ஒன்றில் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டு வந்தவர்கள் எனப் பொலிஸார் கூறினர். ராகமைப் பொலிஸார் கொலையாளிகளைத் தேடுவதற்கு விசேட பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளனர். (க-8)

### 'அச்சாணி மலர்' இன்று வெளியீடு

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் அச்சாணி மலர் 05 வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக றோட்டேறியன் ரி.வாமதேவனும் கலந்துகொள்வர்.

இணைப்பு நிகழ்வுகளாக மாவட்ட றோட்டறகட் கழகங்களுக்கிடையிலான, றோட்டறி சம்பந்தமான வினாவிடைப் போட்டி, வறிய பாடசாலை மாணவர்களுக்குத் துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு என்பனவும் இடம்பெறும். (3-202)

### பொதுமண்டபம் திறந்து வைப்பு

நெடுங்குளம் புதிய குடியேற்றத் திட்டப் பகுதியில் பொதுமண்டபம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

நெடுங்குளம் கிராம மகளிர் அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி செந்திலவாசகனேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பொதுமண்டபத்தைத் திறந்துவைத்தார்.

பிரதேச செயலக நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இப்பொது மண்டபத் திறப்பு விழாவில் நெடுங்குளம் கிராம அலுவலர் கமலவேணி, கொழும்புத்துறை கிராம அலுவலர் ஐ.புஸ்பராணி, முன்னாள் நெடுங்குளம் கிராம அலுவலர்களான தேவராசா, அம்பிகைபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-30)

# முகவர்கள் தேவை
## உங்கள் நகரில்!!!

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எமது Mobitel ஸ்தாபனத்திற்கு தகுந்த Sub dealers தேவை

Mobile Lanka
ATLAS TELECOM

இங்கே!
1)More Card 350/=, 1000/=
2)Pre paid Sim
3)Post paid Sim 300 / 100 } package

விசேட விலைக்கழிவுடன் யாவும் எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். விரும்புவோர் நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ATLAS TELECOM,
MOBILE LANKA,
No.412,HOSPITAL ROAD, JAFFNA.
TP.222 2031, 222 2032.

Mobitel AUTHORIZED DEALER FOR

-நிர்வாகி.


## மீன்பிடி வலைகள் அன்பளிப்பு

மாதகல்,பெப்.26
'எக்கோ' நிறுவனத்தின் உதவியுடன் 'மூவிமொண்டோ' நிறுவனத்தினால் சீந்திப்பந்தல், ஊறணி, சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 48 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மீனவர்களுக்கே தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய வலைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

(10-95)




# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து
## 26.02.2005

நீராவியடியைச் சேர்ந்த
முருகானந்தன்- சாவித்திரி தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி **வைஷ்ணவி** அவர்களின்
பிறந்த நாள் வாழ்த்து.

வையகத்தில் வயது இரண்டை
வாசமொடு பூர்த்தி செய்யும்
வைஷ்ணவியே வாழ்வில் பல பேறுபெற்று
வளமோடு நீயும் வாழி! வாழி!
நீ பிறந்த நாள் நாம் கண்ட இன்பம் போல்
நீ வளரும் நாளும் நாம் காண வேண்டும்
நீ வித்தகி எனப் பலர் போற்ற
அதை நாம் அறிந்து மனம் கமழ்வதை
நீ பார்த்து ஆனந்தம் பொழிவதை
நாம் கண்டு மகிழ்வுற வாழி! வாழி!

12B (44), பிறவுண் வீதி,
நீராவியடி,யாழ்ப்பாணம்.

அன்புடன்
திரு. திருமதி கு. பாலசுப்பிரமணியம்
(அப்பப்பா,அம்மம்மா),
இராகுலன் (மாமா).



## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 10 - 1920 | 19 - 02 - 1992 |

அமரர் **இராசையா செல்வராசா**
திதி: துதியை 26-02-2005

அன்பு அப்பாவே!
ஆண்டுகள் நூறானாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மாறாது மறையாது!

'சுபதர்சன்'
செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில். (42418)(46-16)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## 'நீர்ப்' நிறுவனம் பவுசர்களை வழங்கியது

செம்பியன்பற்று,பெப்.26
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு நீர் விநியோகிக்க 'நீர்ப்' நிறுவனம் பவுசர்களை வழங்கியுள்ளது.

இதுவரை மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் உவர் நீராக மாறியுள்ள கிணறுகளைக் கொண்ட வீடுகளில் வசிப்போருக்கும் பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் 5 தண்ணீர் பவுசர்கள் மூலம் நீர் விநியோகம் செய்து வருகிறது.

(10-36)


உ
## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ராமகிருஷ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் - மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம் கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Room No. 5, Pillaiyar Inn,
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2829
Mobile: 0776 923623.

(சி-40972) (26-16)



## விற்பனையாகின்றது

**புவியியல் தரம் 7**
**பாடமும் பயிற்சியும்**
(புதிய பாடத்திட்டம் 2005)

ஆக்க ஆலோசனை:
செல்வி
**ராதா அம்பலவாணர்**
B.A.Dip.in Ed.
(சிரேஷ்ட புவியியல் ஆசிரியை)

வெளியீடு:
**ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை**
235, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.(சி-41140)(16)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09.01.1966 | 27.01.2005 |

அன்போடு அனைவருடனும்
பாசமாய் இருந்தீரே!
பண்போடு வாழ்ந்திருந்து
எம்மைவிட்டுப் பிரிந்தீரே!
நினைக்கவே நெஞ்சம் தாங்க
வில்லையே தேவகுமாரியே!
உன் ஆத்மா சாந்தியடைய இறை
வனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
எழுது வினைஞர் தொழில்நுட்ப
அலுவலர் ஒன்றியம்.

திருமதி
தேவகுமாரி சிவபாதம்
[தொழிநுட்ப உத்தியோகத்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்–விவசாயபீடம்]

(42440)



# எட்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
# முத்து நடராஜா

| தாம் மடியில் | மண் மடியில் |
|---|---|
| 14.02.1936 | 23.02.1997 |

எங்கள் ஆருயிர்த் தெய்வமே!
எட்டாண்டு சென்றும் உங்களை
மறக்கமுடியாது தவிக்கிறோம்
உம்மிடத்தை நிரப்ப இங்கு
யாரும் இல்லையே
திரும்ப எம்மிடம் வந்து எமக்கு
வழிகாட்டியாய் இருக்கமாட்டீரோ
என்று ஏங்கித் தவிக்கும்

உங்கள் மனைவி: கமலாதேவி
மக்கள்: றஞ்சினி, ராஜன், கண்ணன்,
தீபா, பேபி.
மருமக்கள்: வாசகன், அனு, மாலா
பேரப்பிள்ளைகள்: கீரன், ரூபன், செரீனா,
அருண்,அபிஷ்னா.

முகவரி:
விநாயகர் பாடசாலை அருகில்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (42397)



# நீங்காத நினைவுகளின் 31 ஆம் நாள்
## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.01.1966 | 27.01.2005 |

எங்கள் ஆருயிரே அம்மா!
நீங்கள் ஓடி மறைந்து
இன்று முப்பத்தொரு நாள்கள்
சென்றுவிட்டன...
அன்புடனே எங்களுடன்...
வாழ்ந்த உங்கள் பூ முகம் மட்டும்
இன்றும் எங்கள் நினைவில் நின்று
மறையவில்லையே! உங்கள்
மதிமுகம் காண ஏங்கித்
தவிக்கின்றோம்! மீண்டும் எங்களிடமே
வந்திடுங்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பத்தமேனி தீர்த்தங்குளம்
விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (26.02.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி
தேவகுமாரி
சிவபாதம்
(தொழிநுட்ப உத்தியோகத்தர், யாழ்பல்கலைக்கழகம்- விவசாயபீடம்)

சந்நிதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தந்தை: த.விஜயரட்ணம்
கணவர்: சு.சிவபாதம்
பிள்ளைகள்:சி.சாம்பவி, சி.சாரங்கன்.

(42436)

# பால்மா மோசடி செய்யும் சங்கங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## கிளிநொச்சி அரச அதிபர் எச்சரிக்கை!

பரந்தன்,பெப்.26

குழந்தைகளுக்கான பால்மா வகைகளில் மோசடி செய்யும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் எச்சரித்துள்ளார்.

அண்மையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் - பணிகள் குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்திலுள்ள சங்கங்கள் குழந்தைகளுக்கான பால்மா வகைகளை வைத்துக்கொண்டு இல்லை எனக் கூறி வருவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அது மட்டுமன்றி பால்மா முத்திரைக்கு அதை வழங்காமல் பதிலாக வேறு பொருள்கள் வழங்கப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் முறைப்பாடுகளும் வந்துள்ளன.

எனவே, சங்க ஊழியர்கள் தொடர்ந்தும் இவ்வாறு நடந்துகொள்வார்களாயின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (8-352-202)

## மதகுகள் திருத்த நிதி ஒதுக்கீடு

மல்லாவி,பெப்.26

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பாண்டியன்குளப் பிரதேசத்திற்கு மதகுகளை நிர்மாணிப்பதற்காக 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதகுகள் திருத்த வேண்டிய இடங்களை இனம்கண்டு நிர்மாணிக்கும் பணியைப் பாண்டியன்குளம் பிரதேச சபையினர் ஆரம்பித்துள்ளனர். (8-322-202)

## மெய்வன்மைப் போட்டி

முழங்காவில்,பெப்.26

பூநகரி, வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளையும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ஏ.கே.ஜெயக்குமார், வலைப்பாட்டுப் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன் ரொக் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (8-323-203)




அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவென கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறுக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மீள் உருவாக்கல் கிராமத்தின் பெயர்ப்பலகையையும், தற்காலிக கூடாரம் ஒன்றையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:பரந்தன் செய்தியாளர்)*

# விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளை விவசாயிகள் நடைமுறைப்படுத்துவதில்லை

## விவசாயப் பாடவிதான உத்தியோகத்தர் குறை கூறுகிறார்

பரந்தன்,பெப்.26

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில்லை என கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள விரிவாக்க பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.என்.செல்வராசா குறை கூறுகிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் கவனயீனமாக இருப்பதால் கடந்த ஆண்டுக்கான பெரும் போக நெல் உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது.

கலப்பினம் மற்றும் பழைய நெல்லினங்களைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதாலும் பெரும நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இது முற்றாக மாற்றப்பட வேண்டும்.

விவசாயத் திணைக்களம், ஆராய்ச்சிகள் மூலம் பல புதிய இனங்களை அறிமுகம் செய்ததுடன் உயர்விளைவைத் தரக்கூடிய விதைகளையும் அறிமுகப்படுத்துகின்றது. இதனை இங்கு பெறக்கூடிய வாய்ப்பிருந்தும் விவசாயிகள் இதனைப் பயன்படுத்துவதில்லை - என்றார். (8-352-202)

## லெப்.மஞ்சரியின் நினைவுக்கல் திரைநீக்கம்

கிளிநொச்சி,பெப்.26

கடந்த 28-02-1998 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவடைந்த லெப்.மஞ்சரி (கந்தசாமி சசிதேவி/சுதா வெலிக்கண்டல், கண்டாவளை) என்ற மாவீரரின் வீரவணக்க நிகழ்வும் நினைவுக்கல் திரைநீக்கமும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

முன்னதாக மாவீரரின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வெலிக்கண்டலில் உள்ள அவரது இல்லத்திலிருந்து கண்டாவளை மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

மாவீரரின் திருவுருவப்படம் பிற்பகல் 4.30 மணியளவில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. (8-12)

# படையினரின் ஊடுருவல் ஒரு வேவு நடவடிக்கையே

## கேணல் தீபன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,பெப்.26

கிளாலிப் பகுதியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற சம்பவமானது ஸ்ரீலங்கா படையினரின் வேவு நடவடிக்கையே எனப் புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

கிளாலிப் பகுதிச் சம்பவம் தொடர்பாகத் தீபன் தொடர்ந்து கூறுகையில்:-

கிளாலிப்பகுதியில் உள்ள புலிகளின் முன்னரண் பகுதிக்கு 40 மீற்றர் அண்மையாக இரு இராணுவத்தினர் இருபார்வைத் தொலைநோக்கி, துப்பாக்கி, கைக்குண்டு என்பன சகிதம் முன்நகர்ந்தனர்.

ஸ்ரீலங்காப் படையினரின் முன்னரண் விடுதலைப் புலிகளால் பார்க்கக்கூடியதாக இருக்கும். இரு அரண்களும் இடையே ஆங்காங்கே பற்றைக்காடுகள் இருக்கின்றன. இவற்றுக்கூடாகப் பதுங்கிவரும்போது மட்டுமே இப்பகுதியில் படையினரின் நடமாட்டம் தெரியாது.

ஆனால், விடுதலைப் புலிகளின் அரணுக்கு 40 மீற்றர் தொலைவில்தான் படையினர் விடுதலைப் புலிகளுக்கு தென்பட்டனர். வழிதவறி இப்பகுதிக்கு படையினர் வந்ததாக ஸ்ரீலங்காப் படைத்தரப்புத் தெரிவிப்பது பொய்யாகும்.

அவர்கள் வேவுக்குரிய தொலைநோக்கி, தற்காப்புக்காகத் துப்பாக்கி, கைக்குண்டு என்பவற்றைக் கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை கிளாலி கடற்பகுதியில் 3 படகுகளில் படையினர் நகர்ந்துள்ளனர். ஒரு போர் நடவடிக்கையின் அம்சமான வேவு நடவடிக்கையில் தான் அந்தப் படையினர் ஈடுபட்டனர் என்பது தெளிவானதொன்று - என்றார். (8-12)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் மூல்

# திட்டமிடப்படாத பயிர்ச்செய்கையால் விதை பொருள்களுக்குத் தட்டுப்பாடு

## கண்டாவளைப் பிரதேச செயலர் கவலை

பரந்தன்,பெப்.26

கிளிநொச்சி மாவட்டத்தில் சரியான முறையில் திட்டமிடப்படாது பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், பயிர்ச் செய்கை காலத்தில் விதைபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், மனிதனின் பாவனைக்கேற்ற சத்துணவும் கிடைக்காமல் போய்விடுகின்றது.

இவ்வாறு கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கவலை தெரிவித்துள்ளார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரமந்தனாற்றுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் 635 இற்கும் மேற்பட்ட பங்காளர்களுக்கு 2005 ஆம் ஆண்டுக்கான சிறுபோகப் பயிர்ச் செய்கைக் கூட்டம் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்ப காலங்களில் நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் பயிர்ச்செய்கை வகைப்படுத்தப்பட்டு நன்கு திட்டமிடபபட்டு மேற்கொள்ளப்பட்டு வந்ததை நான் நன்கு அறிவேன்.

நெற்செய்கை, உப உணவுப்பயிர், சிறுதானியப் பயிர்ச்செய்கை என பயிர்ச் செய்கைகள் வகைப்படுத்தப்பட்டுக் குளங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பயிர் உற்பத்திகள் மூலம் விவசாயிகள் பல நன்மைகள் அடைந்துள்ளனர்.

அத்துடன், தமது தேவைகளையும் பூர்த்தி செய்து ஏனைய விவசாயிகளின் பயிர் உற்பத்திக்குத் தேவையான விதை பொருள்களையும வழங்கி வந்தனர்.

கடந்த ஒரு சில ஆண்டுகளாக விவசாயிகள் பல காரணங்களைக் காட்டி உப உணவுப் பயிச்செய்கை மேற்கொள்ளும் குளங்களின கீழ் நெற்செய்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்த காரணத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் விதை பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு ஏனைய இடங்களில் இருந்து வரும் விதை பொருள்களை நம்பிவாழ வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது. எனவே, உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட குளத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச் செய்கை மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த வகையில், பிரமந்தனாறுக் குளத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டுக்கான சிறு போகத்தில் கூடுதலாக உப உணவுப்பயிர்ச் செய்கையே மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.(8-203-352)

# நோர்வே புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் உயிரிழந்த முன்பள்ளி ஆசிரியருக்கு உதவி

முல்லைத்தீவு,பெப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்களினதும், சிறார்களினதும் 60 ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஈருருளி வழங்கும் வைபவமும் உதவித்தொகை வழங்கும் நிகழ்வும் கடந்த 23 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக செயலகத்தில் நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடனும் நோர்வே தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடனும் வடக்கு - கிழக்கு மாகாண முனபள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நடத்தும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளியும், ஆழிப்பேரலையால் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு உதவித்தொகைப் பணமும் வழங்கப்பட்டன.




யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை வடக்கு - கிழக்கு கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லைதீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த செல்வம் ஏற்றிவைத்தார். முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை யாழ்.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெரிஸ்டா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஆழிப்பேரலையின் போது இறந்த முன்பள்ளி ஆசிரியர்களினதும், சிறார்களினதும் பொது உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி ஏற்றி வைத்து மலர் மாலை அணிவித்தார்.

கருத்துரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப்பணிப்பாளர் நீகன், யாழ்மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ், முல்லைதீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது உயிர் நீத்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவிப்பணத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப்பணிப்பாளர் நீகன் மற்றும் சிறுவர் இல்ல இணைப்பாளர் ரவி ஆகியோர் அவர்களது பெற்றோரிடம் வழங்கினர். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஈருருளிகளை முல்லைதீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி வழங்கினார். (8)

## கடல் வள ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிபளோமாவை முடித்து வெளியேறிய முதலாம், இரண்டாம், மூன்றாம் அணிகளில் கடல்வள ஆசியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும், மற்றும் ஏனையோருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.கல்வி வலயத்தில் இயங்கும் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (3-203)


விற்பனையாகிறது

தரம் 10-11 வகுப்புக்களுக்கான

★அபிவிருத்திக்கல்வி

(திருத்திய மூன்றாம் பதிப்பு)

★அபிவிருத்திக் கல்வி

வினா விடை (O/L)

தொகுப்பு: தனலெட்சுமி புண்ணியமூர்த்தி

பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 222 6693


# வளலாயில் குடியமர ஏற்பாடு செய்யுமாறு வலி.வடக்கு மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிப்பு

வலிகாமம் தெற்கு,பெப்.26

பலாலி, மயிலிட்டி, வளலாய், தையிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, வலித்தூண்டல் போன்ற வலிகாமம் வடக்குப் பிரதேச கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை கடற்கரையோரமாக உள்ள வளலாய் கிராமத்தில் குடியிருப்புக்களை அமைத்து குடியமர அனுமதிக்குமாறு யாழ்.அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின சமாசச் செயலாளர் ந.ரட்ணராஜா வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர், யாழ்ப்பாணம்,அரச அதிபர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வலிகாமம் வடக்கில் உள்ள மேற்படி கிராமங்களில் இருந்து 1990ஆம் ஆண்டு முதல் மக்கள் இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்தினால் தற்காலிகமாகத் தங்கியிருந்த பல கடற்றொழிலாளர் குடும்பங்கள் தமது இருப்பிடங்களையும், கடற்றொழில் உபகரணங்களையும் முற்றாக இழந்துள்ளன.

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உதவிப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் ந.ரட்ணராஜா கடற்றொழிலாளர் பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறினார்.

1990 ஆம் ஆண்டில் இருந்து சுமார் ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ளன.

இவர்களில் பலர் வடமராட்சி பகுதியில் உள்ள கடற்கரையோரங்களில் தற்காலிக வசிப்பிடங்களை அமைத்து தொழிலில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பினால் குடும்பங்களின் வாழ்விடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. அத்துடன், இவர்களின் கடற்றொழில் உபகரணங்கள், வள்ளங்கள் அனைத்தும் முற்றாக அழித்துள்ளன.

சுனாமி பேரலை அனர்த்தங்களின் பின்னர் நூறு மீற்றர் தூரத்துக்கப்பால்தான் குடியிருப்புகளை அமைக்க முடியும் என வலியுறுத்தப்படுவதால் இவர்கள் வாழ்விடங்களை அமைத்துக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, வளலாயில் உள்ள வெளியான பிரதேசங்களில் இக்கடற்றொழிலாளர் குடும்பங்களைத் தற்காலிகமாகவேனும் குடியமர்த்த உரிய நடவடிக்கைகளை வலி.வடக்குப் பிரதேச செயலர் மேற்கொள்ளவேண்டும். யாழ். அரசஅதிபரிடமும் இதுதொடர்பான கோரிக்கையை சமாசம் முன்வைத்துள்ளது.

என அவர் மேலும் தெரிவித்தார் (எ-152)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### மகாலிங்கம் சித்திரா

(கலா)

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கே
விழுதுகள் நிலத்தைத் தொடும் வேளை
விழுந்து போனதோ ஆலமரம்
நிழலில் ஆறிய பறவைகள்
சிறகொடிந்தது போல் ஆனதே
மண்ணில் பிறந்த நாள் முதலாய் எம்மை
கண்ணில் மணியாகக் கருதி வளர்த்தாயே
பெண்ணின் பெருந்தகையே தாய்க்கு
இலக்கணமாகி நான்கு ஆண்டுகள்
ஆனதம்மா எதையம்மா நாம் காண்போம்
தாயின் பெருமையை உணர்ந்த மகனும்
வாரி அணைத்தெடுத்து வளர்த்த கைகளை
மலர்ந்த உன் வதனச் சிரிப்பை
வாழ்நாளில் காணக் கிடைக்குமா?

தோற்றம்
26-12-1966

மறைவு
26-02-2001

டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு. (42489)(21-16-18-42) - கணவர், பிள்ளைகள்.

## தியாகராஜ சுவாமிகள் ஆராதனை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

வட இலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 158 ஆவது ஆராதனை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபையின் தலைவருமான ப.விகினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சற்குரு தியாகராஜ சுவாமிகளின பூசை வழிபாடுகளும், யாழ். மாவட்டத்தில் உள்ள கலைஞர்களின பஞ்சரத்தின கீர்த்தனா அஞ்சலி நிகழ்வும் முதுபெரும் கலைஞர்கள் மற்றும் அணிசெய் கலைஞர்கள இணைந்து நிகழ்த்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனா அஞ்சலி நிகழ்வும் இளைப்பாறிய பிரதிக் கல்விப பணிப்பாளர் கலாபூசணம் சு.கணபதிப்பிள்ளையின் உரையும் இடம்பெறவுள்ளன. (3-203)

## அகவிழி சஞ்சிகை விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்பல்கலைக்கழக கல்வியற்றுறையின் ஏற்பாட்டில் 'அகவிழி' ஆசிரியத்துவ நோக்கு சஞ்சிகையின் நூல் விமர்சன அரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இதுவரை வெளியாகியுள்ள இச்சஞ்சிகையின் ஐந்து வெளியீடுகள் பற்றி பல்வேறு துறை சார்ந்தவர்கள் விமர்சனம் செய்யவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(3-203-405)


ஆங்கிலத்தை இலகுவாக கற்க
English Forum வெளியீடுகள்!
விற்பனையாகின்றன!
தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான
Words & Meanings Rs.75/-
சொற்களும் ஆங்கில தமிழ் கருத்துக்களும்
Know about Essays Rs.75/-
37 மாதிரிக் கட்டுரைகளும் பயிற்சிகளும்
By : S.Santhiramouli (Dip. in Eng.)
கிடைக்குமிடங்கள் :
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.
பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
தொடர்புகளுக்கு :
Mr.S.Santhiramouli,
English Forum,
Kondavil West.
☎ 077 7150611



Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7644213 முதல் 7655673 வரை
சீட்டிழுப்பு இல. 112 திகதி 24-2-2005

வெற்றி எண்கள் 1 3 9 3 0 9 சுப்பர் எண் 05

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,95,14,175/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,95,14,175/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 5,000/- | 5,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,002 | 500/- | 5,01,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,066 | 50/- | 5,03,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 99,714 | 10/- | 9,97,140/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,007 | 100/- | 1,00,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,970 | 20/- | 1,99,400/- |
| மொத்தம் | 121,990 | | 50,68,140/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 50,68,140/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,97,93,950/-

தொடர் இல. 6697002 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 28 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செ சன்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7648868-0-55
7649058-0-77
7652007-9-10
7648652-6-37
7649177-3-37
7648317-4-36
7648052-3-22
7654285-6-50


## நரம்பியல் சம்பந்தமான இலவச மருத்துவ சேவை

இடம்: சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை

காலம்:

*2005. 02. 28 – திங்கட்கிழமை காலை 10.00 மணி தொடக்கம்*

*2005. 03. 01 – செவ்வாய்க்கிழமை 10.00 மணி தொடக்கம்*

*2005. 03. 02 – புதன்கிழமை 10.00 மணி தொடக்கம்*

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நரம்பியல் சம்பந்தமான நோய்களுக்கான இலவச மருத்துவ சேவை மேற்குறிப்பிட்ட நாள்களில் நடைபெறவுள்ளன.

கனடாவிலிருந்து வருகைதந்துள்ள வைத்திய நிபுணர்களான வைத்திய கலாநிதி அ.முகுந்தன், வைத்திய கலாநிதி திருமதி சோதிமலர் முகுந்தன் ஆகியோரின் தலைமையில் வைத்திய சேவைகள் நடைபெறும்.

இச்சேவையில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன் பெறுமாறு அறியத்தருகின்றோம்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை
அபிவிருத்திச் சபை.

(C/41155)

விளம்பர அனுசரணை:
மிட்லான்ட் வீடியோ சென்ரர்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(C/41188)(42-16-18)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலம் இராசமணி

ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் இராசமணி அவர்கள் நேற்று (25.02.2005) வெள்ளிக்கிழமை காலை இறைவனடியெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஊரிக்காடு திரு.திருமதி விசுவலிங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற முத்து பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் தேவசிரோன்மணியின் (கட்டி - முன்னாள் பதில் உபதபால் அதிபர் - தொண்டைமனாறு) அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் (மலேசியா), கணேசரத்தினம் (மலேசியா), தம்பி, புஷ்பம் (ஆசிரியை, அம்பிகை பாலர் பாடசாலை - கெருடாவில்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற உபதபாலதிபர் முத்துராஜாவின் அன்பு மாமியாரும் இரவீந்திரன் (ஆசிரியர். யா/வேலாயுதம் ம.வி., யா/சிதம்பராக் கல்லூரி), சாரதாதேவி (ஆசிரியை - உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை), திருமதி இ.குமுதமலர் (தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2005) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"முத்துவாசா",
கெருடாவில்,
தொண்டைமானாறு. (C/41193)(42-16-18)

தகவல்:
திருமதி தே.முத்துராஜா
(மகள்).

இன்று தொடக்கம் 05-03-2005 வரை
GLX 125 மோட்டார் சைக்கிளிற்கு
விசேட விலைக்கழிவு
சிவகுரு கட்டடப்பொருள், உந்துருளி வாணியம் பரந்தனில் மிகக்குறைந்த விலையில் TVS GLX 125 மோட்டார் சைக்கிள்கள் அனைத்து வர்ணங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
இலவசமாக் மழைக்கவசம்,
தலைக்கவசம்,
இலவச பராமரிப்பு (சேவிஸ்) மற்றும்
ஒரு வாரத்தினுள் புத்தகப் பதிவு செய்துதரப்படும்.
விற்பனை விலை - 119,000/=
சிறிய தொகையே கையிருப்பில் உண்டு.



சிவகுரு கட்டடப்பொருள், உந்துருளி வாணிபம்,
யாழ்சாலை, பரந்தன். ☎ 021-2285072


## கட்டடத் திறப்புவிழா பிற்போடப்பட்டது

இன்று மு.ப.11 மணிக்கு நடைபெறவிருந்த வேலணை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது எனத்தெரிவிககப்பட்டுள்ளது.

இக்கட்டடத்திறப்பு விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவிததனர்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)(3-12)

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவில் மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்தவரும் ஆன்மீகவாதியும், சிவத்தொண்டரும், மக்கள் சேவையாளனும் ஆகிய

**"சிவதொண்டர்" வே.க.ஏரம்பு**

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர்களின் குடும்பம் ஆறுதல் அடையவும், மீனாட்சி சுந்தரப் பெருமான் பாதங்களை வணங்கி எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

மதுரையம்பதி
சிவன் தேவஸ்தானம்.
புங்குடுதீவு - 03.

ஸ்ரீ.நாகேந்திரக் குருக்கள்.

(42501)(43-11-45)

## நன்றித்துதி ஆராதனை

*"கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள"*
(1தெசலோனிக்கேயர்4:16)

கர்த்தருக்குள்
நித்திரையடைந்த



செல்வி
**ராஜினி செல்லத்துரை**
(தபித்தாள்)

அவர்களின் ஒருமாத நிறைவை முன்னிட்டு இன்று (26.02.2005) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறவிருக்கும் நன்றித்துதி ஆராதனையிலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் தங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள்
உரும்பிராய் தெற்கு,
செல்வபுரம், உரும்பிராய்.
(42503)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தால் நடத்தப்படும் சித்திரப் போட்டி

கருப்பொருள்: "யாழ்.மாதின் உழைப்பும் ஊதியமும்..."
தங்களின் படைப்புக்கள்

- ★ 18"x14" அளவை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
- ★ வேறெந்தப் போட்டியிலும் பங்குபெறாததாக இருக்க வேண்டும்.
- ★ ஆர்வமுள்ள அனைத்து வயதினருக்கும் உரியது.
- ★ வர்ணங்களின் தெரிவு போட்டியாளரின் விருப்பத்திற்குரியது.
- ★ தங்களின் படைப்புக்கள் மாணவராயின் பாடசாலை அதிபரினாலும், ஏனையோரின் படைப்புக்கள் கிராம சேவகரினாலும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- ★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- ★ வெற்றிபெறும் வெற்றியாளர்களுக்கு.

**முதலாம் பரிசு - 3,000 ரூபாவும் சான்றிதழும்.**
**இரண்டாம் பரிசு - 2,000 ரூபாவும் சான்றிதழும்.**
**மூன்றாம் பரிசு - 1,000 ரூபாவும் சான்றிதழும்.**

**ஐந்து ஆறுதல் பரிசுகள்**

★ முடிவு திகதி:05.03.2005
★ தங்களின் படைப்புகள் வந்து சேரவேண்டிய முகவரி

**இணைப்பாளர்,**
U.S.Aid Project,
16, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(42502) (43-11-45)

## இலக்கிய நூல்களுக்கான பரிசுத்திட்டம் - 2004

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட 08 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01. நாவல்
02. சிறுகதை
03. நாடகம்
04. சிறுவர் இலக்கியம்
05. கவிதை
06. இலக்கிய ஆய்வும், விமர்சனமும்
07. உயர்கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச்சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கவும்.

**போட்டி விதிகள்.**

01. ஓர் எழுத்தாளர் எல்லாப்போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.
02. பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 08 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03. நூல்கள் 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்குநூல்களை அனுப்பும் போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்
05. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல்பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர்,

**உதவிப் பணிப்பாளர்,**
**பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்,**
**கல்விஅமைச்சு, திருகோணமலை**

என்ற முகவரிக்கு பதிவுதபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆர். தியாகலிங்கம்,
செயலாளர்.

(ச-41195) (43-11-45)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05.03.1926 — மறைவு 02.03.1991

**இளையதம்பி இரகுநாதன்**
(இலகுப்பிள்ளை)

பாசத்தின் உறைவிடமே! பண்பின் ஒளிவிளக்கே! அறிவின்
இருப்பிடமே அன்புத் தெய்வமே!
அன்போடும் பண்போடும் எம்மை வளர்த்து
சீரோடும் சிறப்போடும் வாழவைத்து
பேரோடும் புகழோடும் பூவுலகை நீத்து
விண்ணுலகை நோக்கிச் சென்ற தந்தையே!
வருடங்கள்பல சென்றும் ஆறவில்லையே எம்மனம்
போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகளெல்லாம் உங்கள்குரல்
அப்பா என்று நாம்யாரை அழைப்பது?
காலங்கள் எத்தனைகடந்தாலும்
மாறாது உங்களின் நினைவலைகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

'உடையார் வளவு',
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (42500)(43-11-45)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த
மானஸ்தன்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பி.நே.) (C/40667)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு இளையதளபதி விஜய் (சிறப்பு தோற்றம்), நமீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த
சுக்ரன்



காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாதன்ஸ் சினிமா
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பி.நே.)
பரத், சந்தியா இன்னும் பலர் நடித்த
காதல் சில தினங்கள் மட்டும்
ஜெய்ஆகாஸ் - பிரமஜி - நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த
குருதேவா இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு விரைவில் எதிர்பாருங்கள் எமது அடுத்த வெளியீடு.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
(ரீல்ஸ்)
தினசரி
11.00. 3.00. 7.00.
(பி.நே.) (C/39654)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், விக நடித்த
மூன்றாவது வாரம்



ஜி
(ரீல்ஸ்)
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, (பி.நே.)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## பதவி வெற்றிடம்

## உதவி நிர்வாக அலுவலர்
(Assistant Administrative Officer)

உதவி நிர்வாக அலுவலருக்கான விண்ணப்பங்கள் ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

*வேண்டிய தகைமைகள்:*

01 குறைந்தது க.பொ.த. (உயர்தரம்) வர்த்தகத்துறையில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

02. அரச சேவையில் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியில் பதவி நிலை உத்தியோகத்தராக இருந்தவர் (Executive Clerical Service Class-I and above/Manager/ Administrative Officer) மும்மொழிகளும பேச, வாசிக்க, எழுதக் கூடியவா விரும்பத்தக்கது.

03) கணனியில் தேர்ச்சி இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

*வயதெல்லை:* 45 வயதிற்கு மேற்பட்டவராக இருததல் வேண்டும்.
*சம்பளம்:* தகைமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரியின் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சுயகோவைச் சான்றிதழ், அத்தாட்சிப் பத்திரங்களுடன் (பிரதிகள்) கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு 04.03.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(C/41190)(43-11-45)

## இறை இணைவில் எம் நினைவில் 31 ஆம் நாள்...

மண்ணில் மலர்ந்தது
31 - 05 - 1942



விண்ணில் புலர்ந்தது
27 - 01 - 2005

அமரர்
**கி.மரியாம்பிள்ளை தவராஜா (J.P)**

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமே!
நெஞ்சம் நெகிழும் நினைவலைகளில் உங்கள்
நிஜத்தினைக் காண்கின்றோம். கண்ணொடிப்
பொழுதில் மறைந்து விட்டீர்கள். கண்கள்
கலங்கினாலும் விழிநீர் வற்றினாலும்
உங்கள் நினைவுகள் காலத்தால் அழிவதில்லை.
எங்கள் நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (26.02.2005) சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

"டெயிசி வாசா"
கரவெட்டி,
T.P.:226 3035

அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்,
பேறாமக்கள், உற்றார், உறவினர்.

(ச-41193) (43-11-45)

# போருக்கான தயார்ப்படுத்தலே படையினரின் வேவு நடவடிக்கை

## கிளாலிச் சம்பவம் குறித்து தளபதி கேணல் தீபன்



கிளாலிப் பகுதியில் சூனியப் பிரதேசத்துக்குள் தொலைநோக்கிகள், துப்பாக்கிகள் என்பவற்றுடன் வந்து படைச் சிபாய்கள் புலிகளின் நிலைகளை வேவுபார்க்க முயன்றமையானது அரச படைகளின் போர்த்தயார்ப்படுத்தல் நடவடிக்கையையே வெளிப்படுத்துகின்றது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்.

கடந்த புதன்கிழமை கிளாலியில் சூனியப் பிரதேசத்தில் வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளாலியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவம் சிறிலங்காப் படையினரின் வேவு நடவடிக்கையே ஆகும். இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கு 40 மீற்றர் அண்மையாக இரு சிறிலங்கா இராணுவத்தினர் இரு பார்வை தொலைநோக்கி, துப்பாக்கி, கைக்குண்டு சகிதம் முன்னகர்ந்தனர். படையினரின் முன்னணிக் காவலரண் விடுதலைப் புலிகளினால் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இரு அரண்களுக்கும் இடையே ஆங்காங்கே பற்றைக் காடுகள் இருக்கின்றன. இவற்றுக் கூடாகப் பதுங்கிவரும்போது இப்பகுதியில் படையினர் நடமாட்டம் தெரியவராது. ஆனால், சம்பவ தினத்தன்று விடுதலைப் புலிகளின் அரணுக்கு 40 மீற்றர் தொலைவில்தான் படையினர் விடுதலைப் புலிகளுக்குத் தென்பட்டனர். வழிதவறியே படையினர் இப்பகுதிக்கு வந்தனர் என சிறிலங்கா படைத்தரப்பினர் தெரிவிப்பதானது பொய்யானது. அவர்கள் வேவுக்குரிய தொலைநோக்கி தற்பாதுகாப்புக்காகத் துப்பாக்கி, கைக்குண்டு ஆகியவற்றை எடுத்து வந்திருக்கின்றனர்.

இதேவேளை -

கிளாலிக் கடற்பகுதியில் மூன்று படகுகளில் படையினர் நகர்ந்திருந்தனர். ஒரு போர் நடவடிக்கையின் அம்சமாகவே வேவு நடவடிக்கையில் தான் அந்தப் படையினர் ஈடுபட்டனர் என்பது தெளிவானது.

கிளாலி சிறிலங்காப் படைத்தளம் பலம் வாய்ந்த முக்கியமான தொன்றாகும். இதனை மையமாகக் கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் பலப்படுத்தல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார். (த)

## கடற்புலிப் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அங்கு தயானந்தனின் வித்துடலுக்கு மக்கள்அஞ்சலிசெலுத்துவர். நாளை ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி மாவீரர்துயிலும் இல்லத்தில் அவரது வித்துடல் விதைக்கப்படும்.

(த-70-190)

## இளவரசர் சார்ள்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசினாலும் வெளிநாட்டுப் பிரமுகர்களாலும் புறக்கணிக்கப்பட்ட - பாதிக்கப்பட்ட - வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் நிலைமைகளைத் தெரியப்படுத்துவது முக்கியமானதாக உள்ளது - என்றார்.

(த-க)

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தம் பலவீனப்பட்டிருக்கும் நிலையில் இராணுவத்துக்குப் புதிதாக ஆள்சேர்ப்புச் செய்வது மேலும் சர்ச்சையை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-க)

## பொதுக்கட்டமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.தெரிவித்தார். இந்தவிடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்புடன் கலந்துரையாடியபின் மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸுடன் சந்திப்பை ஏற்படுத்துவது என நேற்றைய சந்திப்பில் முடிவுசெய்யப்பட்டது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(த-க)

## புலிகளின் படங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது பெயின்ட்டை 'ஸ்பிறே' செய்து அசிங்கப்படுத்தி விட்டு நழுவிச் சென்றுவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்பாட்டாளர்கள், பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தனர். உடனடியாக அங்கு வந்த பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தொடர்ந்து நேற்று மாலை கண்காட்சி நிறைவடையும் நேரம்வரை பொலீஸார் பாதுகாப்பு வழங்கினர். பிரித்தானியாவைச் சேர்ந்த பத்திரிகையாளரான வோல்ரர் ஹெலரினால் பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

இலங்கையின் சமாதானம் குறித்த பல்வேறு விடயங்கள், நிகழ்வுகள் யாவும் புகைப்படங்களாக சித்திரிக்கப்பட்டிருந்தன.

அரசியல்தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவ நிலைகள் சம்பந்தமான புகைப்படங்களும் இதில் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## மேலும் ஒரு தொகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.26

வடக்கு - கிழக்கில் மேலும் 197 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டிமெல், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒரு தொகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதில் எஞ்சியிருந்தவர்களுக்கே இப்போது நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவத்தை நேற்றுக் கல்வி அமைச்சில் சந்தித்தபோது தாரா டிமெல் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார். (த-12)

## விபத்தில் சிறுமி பலி !

கண்டி, பெப்.26

கண்டி, கட்டுகஸ்தோட்டை - அம்பத்தென்ன வீதியில் பொகலவெல என்ற இடத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் ஒன்று நேற்று கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்ததில் 8 வயது சிறுமியொருத்தி உயிரிழந்தாள். 11 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த 11 பேரும் கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

உயிரிழந்த சிறுமி, கண்டி கிங்ஸ்வூட் பாடசாலையில் கல்வி பயில்பவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (த-க)

## இந்தியக் குழுவினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அபிவிருத்தி ஆலோசகர் வ.ஜெகநாதனும் உடன்வருகின்றார்.

இவர்கள் கொழும்பில் இருந்து இன்றுகாலை 6.30 மணிக்கு விசேட விமானம் மூலம் புறப்பட்டு பலாலி விமான நிலையத்தை வந்தடைவர். அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் காலை 9 மணியளவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் செல்வர்.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் இக்குழுவினரை அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வருவார் எனவும் - வைத்தியசாலையைப் பார்வையிடும் இக்குழுவினர் அதனை அபிவிருத்திசெய்வது தொடர்பாகக் கலந்துரையாடுவர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (த-51)

## துணைப்படை ஏதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு) அரசு மேற்கொண்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதியை நேற்று முன்தினம் இரவு அவரது உத்தியோகபூர்வ மாளிகையில் சந்தித்துப் பேசினார். அப்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஜனாதிபதி - சொல்ஹெய்ம் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தமாத ஆரம்பத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துத் தாம் பேசிய விடயங்கள் குறித்தும், கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துத் தாம் பேசிய விடயங்கள் குறித்தும் சொல்ஹெய்ம் ஜனாதிபதிக்கு விளக்கினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 1.8 இல் கூறப்பட்டுள்ளதன்படி இராணுவத் துணைப்படையினரின் ஆயுதங்கள் களையப்படாதது குறித்தும், தமது மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்தவரான கௌசல்யனின் கொலை குறித்தும் தமிழ்ச்செல்வன் தெரிவித்த விடயங்களை சொல்ஹெய்ம் ஜனாதிபதியிடம் கூறினார். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான புலிகளின் கருத்துக்களையும் அவர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்.

கௌசல்யன் மற்றும் ஐவரின் படுகொலையை இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி கடுமையாகக் கண்டித்தார். அதேசமயம் இராணுவத்தினருடன் சேர்ந்து துணைப்படைகள் இயங்குகின்றன எனக் கூறப்படும் குற்றச்சாட்டை ஜனாதிபதி அடியோடு மறுத்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 3 ஆம் ஆண்டு நிறைவு வேளையில், கிளாலியில் புலிகளின் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டும் மற்றொருவர் காயமடைந்தும் உள்ளமை குறித்த தனது கவலையை ஜனாதிபதி சொல்ஹெய்மிடம் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பில் சொல்ஹெய்முடன் நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர். அரசுத் தரப்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால மற்றும் வெளிவிவகார அமைச்சு செயலர் பாலிக்கார ஆகியோர் கலந்துகொண்டனர். இதேவேளை, நேற்று முன்தினம் இரவு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து இன்றைய அரசியல் நிலை குறித்து சொல்ஹெய்ம் பேசினார்.

(த-க)


### குணப்படுத்த முடியாத நோய்களா?

குணப்படுத்த முடியாத நோய்கள் என்று சொல்லப்படுகின்ற ஈரல் அழற்சி, மஹோதரம், இதயத்தில் துவாரம், இதயவால்வுப் பிரச்சினைகள், நிகொட்டின் விளைவுகள், அல்சிமர்ஸ் நோய்கள், மனச்சோர்வு, ஒற்றைத் தலைவலி, விரலில் கட்டி மற்றும் விக்கம் போன்ற சகலவற்றுக்கும் எம்மிடம் பரிகாரம் உண்டு.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOLAPPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
(இ-41043)


## இ.தொ.காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் எனக் கூறப்பட்டது. இ.தொ.கா. வட்டாரத்தில் இது பெரும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் அறியமுடிந்தது.

இ.தொ.கா. எம்பிக்கள் நேற்று சபாநாயகரைச் சந்தித்து இ.தொ.கா. சார்பில் இதுவரை அமைச்சர்களாக இருந்த இருவருக்கும் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் ஆசனம் ஏற்பாடுசெய்யும்படி கோரிக்கை விடுத்தனர். எனினும், அவர்கள் சபைக்குள் பிரவேசிக்கவில்லை.

அரசுக்கு முட்டுக்கொடுக்க இ.தொ.கா. முன்வந்ததற்குப் பிரதியுபகாரமாக அமைச்சர் சி.பி. ரத்னாயக்காவிடமிருந்து தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு பறிக்கப்பட்டு இ.தொ.காவின் முத்துசிவலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே.

தாம் அமைச்சரானவுடன் பொலீஸ் சேவையில் ஆயிரம் பேருக்கும் ஆசிரியர்களாக 3,500 பேருக்கும் அரச முன்னரங்க அலுவலகங்களில் 2,500 பேருக்குமாக மலையக இளைஞர், யுவதிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என்றார் முத்துசிவலிங்கம்.

அதை அமைச்சரவை அங்கீகரித்துவிட்டது என்றும் அமைச்சர் முத்துசிவலிங்கம் பின்பு பகிரங்கமாக அறிவித்தார். ஆனால், இன்று வரை ஒரு நியமனம் கூட வழங்கப்படவில்லை.

இது விடயத்தில் ஜனாதிபதி இ.தொ.கா.வை இழுத்தடித்துக் கொண்டே இருக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம், நோர்வூட் விளையாட்டரங்கு, ரம்பொடை கலாசார நிலையம் என்பனவற்றை தொண்டமான் பவுண்டேசனுடன் உரித்துடையதாக்கித் தாரைவார்க்கவேண்டும் என்ற இ.தொ.கா. கோரிக்கையும் அமைச்சரவையினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

பொதுமக்களுக்கு முகம் கொடுக்க முடியாமலே இ.தொ.கா. அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்தது என்றும் கூறப்படுகின்றது.

இ.தொ.காவின் இராஜினாமா தொடர்பாக எதிர்க்கட்சி வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, 'ஒரு ஸ்திரமான நிலைப்பாட்டைக் கொண்டிராத இவர்களை எப்படி நம்புவது? இவர்களை எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் மீண்டும் இணைத்து செயற்படுவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை' என்று கூறப்பட்டது.

அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துவிட்ட இ.தொ.கா. இப்போது இரண்டும்கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக இ.தொ.கா. தலைவருடன் தொடர்புகொள்ள முயன்றபோதும் தொடர்பு கிடைக்கவில்லை. ஏனைய மூத்த உறுப்பினர்கள் உதயனுக்குக் கருத்துக் கூற மறுத்துவிட்டனர். (த-க-12)

## கண்ணீர்க் காணிக்கைகள்



25.02.2005 அன்று
அகாலமரணமடைந்த எமது அன்பு
உடன்பிறவாச் சகோதரரான

### செல்வன் சுந்தரலிங்கம் டினேஸ்

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மைதிலி நகைமாடம்,
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 0776092154

- சகோதரர்கள்.

(42505)


CATWAS. COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundikuli.
T.P. : 021 - 222 3805
புதிய பிரிவுகள் 01.03.2005
01. On Line Microsoft Office.
One Month
02. On Line DTP.
One Month
★ Diploma Courses
MS-Office 1,750/=
DTP 2, 000/=
Hardware 1,500/=
Web Page 3, 000/=
Video Mixing 2, 500/=
★ Certificate Courses
★ Microsoft Kids Program
(அ/41127)


## மரண அறிவித்தல்

### சுந்தரலிங்கம் டினேஸ்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் டினேஸ் அவர்கள் நேற்று (25.02.2005) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.



அன்னார் சுந்தரலிங்கம் - யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் சுதர்சன் (குருநாகல்), கார்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஐயம்பிள்ளை, அருளம்பலம், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பூமணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்கும்பான் மேற்கு,*
*5 ஆம் வட்டாரம்,*
*வேலணை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(42504)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.